புள்ளியியல் செய்முறை மாதிரிகள்

– சௌந்தர பாண்டியர் (வ: சு)

	22 MAR 1988	
6 JAN 1983	25 APR 1988	
10 FEB 1983	28 JUL 1990	
	8 MAY 1992	
	12 DEC 1992	

CONNEMARA (STATE-CENTRAL) PUBLIC
LIBRARY, MADRAS-8.

DATE LABEL

Call No. BT 3128-2 Acc. No. 261628

This book should be returned on or before the date last marked above. An overdue charge of 6 paise will be levied for each day the book is kept beyond that date.

C.P.L. 8-(2)—35,006—4-1-78 (G.P., Ms. I)

த.பா.நி. (க. வெ.) வரிசை எண்—796

பியல் செய்முறை மாதிரிகள்

(இரண்டாம் பாகம்)

(பாடத் திட்டத்தின்படி வெளியிடப்படுகிறது)

ஆசிரியர்

சௌந்தர பாண்டியன், எம். எஸ்சி.,
உதவிப் பேராசிரியர்,
பியல் துறை, மாநிலக் கல்லூரி,
சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—March, 1978

Number of Copies—2000

T.N.T.B.S. (C.P.) No. 796

© Government of Tamilnadu

STATISTICS - PRACTICAL EXERCISES (Part-II)

V. S. SOUNDARA PANDIAN

Price Rs. 9-15.

Published by the Tamilnadu Textbook Society under the Centrally sponsored scheme of production of books and literature in regional languages at the University level of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture) New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

Printed by
Vijayakumar Printing Works
17, Ashtabujam Road,
Choolai, Madras-600007

அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினோராண்டு கள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் இளங்கலை வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர் களின் ஊக்கம் பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற் கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன்வந்துள்ள நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத்திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில் கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவை யான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகமும் சென்னைப் பல்கலைக்கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெரு முயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாற்றியல், அரசியல், உளவியல், பொருளியல், மெய்ப் பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணித வியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வாணியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டவியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூலநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்று இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான புள்ளியியல் செய்முறை மாதிரிகள்—(இரண்டாம் பாகம்) என்னும் இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 796ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில்வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 831 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்ட'த்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைகழகங்களிலும் கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ்; எங்கும் தமிழ்' என்னும் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தமிழக ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்த தாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவி களுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரித்தாகுக.

செ. அரங்கநாயகம்

பொருளடக்கம்

(இரண்டாம் பாகம்)

		பக்கம்
6.	வளைகோடு பொருத்தல் ...	1
7.	குறியீட்டெண்கள் ...	63
8.	வரைபடங்கள் ...	175
9.	வளைகோடுகள் ...	245
	மடக்கை ...	327
	எதிர் மடக்கை ...	329
	வர்க்கங்கள், மூலங்கள், தலைகீழ்ப் பின்னங்கள் ...	331
	வர்க்கங்கள் ...	333
	வர்க்கமூலங்கள் ...	335
	எண்களின் தலைகீழ்ப் பின்னங்கள் ...	339
	மேற்கோள் நூற்பட்டியல் ...	341
	கலைச்சொற்கள் ...	349

6. வளைகோடு பொருத்தல்

(Curve Fitting)

குறைந்த வர்க்கக் கொள்கை

நேரில் கண்டறிந்த ஜோடி மதிப்புகள் (x_1, y_1), (x_2, y_2), (x_3, y_3)............$(x_n\, y_n)$ என்பனவாக இருக்கட்டும்.

இம் மதிப்புகளுக்குப் பொருத்தப்படவேண்டிய பரவளைவு (Parabola) p மானம் உடைய கீழ்க்காணும் சமன்பாடாக இருக்கட்டும்.

$$y = a_0 + a_1 x + a_2 x^2 + a_3 x^3 + \dots\dots\dots + a_p x^p \qquad \dots(1)$$

இங்கு a_0; a_1; a_2; ....a_p என்ற $(p+1)$ மாறாத எண்களின் மதிப்பைக் கண்டறிய விரும்புகிறோம். y-ன் நேரில் கண்ட மதிப்பு y_i ஆகும். மேற்கண்ட சமன்பாடு (1)-லிருந்து கண்ட கணக்கு மதிப்புகள்

$$Y_1 = a_0 + a_1 x_1 + a_2 x_1^2 + \dots\dots\dots + a_p x_1^p$$
$$Y_2 = a_0 + a_1 x_2 + a_2 x_2^2 + \dots\dots\dots + a_p x_2^p \dots$$
$$\dots\dots\dots\dots\dots\dots\dots\dots\dots\dots\dots\dots$$
$$Y_n = a_0 + a_1 x_n + a_2 x_n^2 + \dots\dots\dots + a_p x_n^p$$

என்பனவாகும். அல்லது, பொதுவாக

$$y_i' = a_0 + a_1 x_i + a_2 x_i^2 + \dots\dots\dots + a_p x_i^p \qquad \dots(2)$$

$n > p$ என இருப்பின், $y_1, y_2, \dots\dots, y_n$ என்ற $(p+1)$ மாறாத எண்களின் பொருத்தமான மதிப்பை, மேற்கண்ட n-சமன்பாடுகள் சாதாரணமாகக் கொடுக்காது. உண்மையில் $(p+1)$ மாறா எண்களின் மதிப்பைக் கண்டறிய $(p+1)$ சமன்பாடுகளை விரும்புகிறோம். இக் கடினத் தன்மையைக் **குறைந்த வர்க்கக் கொள்கை** முறையைப் பயன்படுத்தித் தீர்க்கிறோம்.

இக் கொள்கைப்படி

$S = \Sigma \; (y_i - a_0 - a_1 x_i - a_2 x_i^2 \dots\dots\dots a_p x_i^p)^2$ அல்லது $S = \Sigma \; (y_i - Y_1)$ என்பது மிகக் குறைந்த மதிப்புடையதாக இருக்கவேண்டும்.

இங்கு வித்தியாசம் $(y_i - Y_1)$ என்பதை எச்சம் (Residuals) எனக் கூறுகிறோம். S என்ற மதிப்பு குறைந்த மதிப்புடையதாக இருக்க, தேவைப்படும் நிபந்தனை,

$$\frac{\partial S}{\partial a_0} = \frac{\partial S}{\partial a_1} = \frac{\partial S}{\partial a_2} = \ldots\ldots = \frac{\partial S}{\partial a_p} = 0$$ என்பதாகும்.

சுலபப்படுத்திய பின்பு :

$$\Sigma y_i = na_0 + a_1 \Sigma x_i + \ldots\ldots\ldots + a_p \Sigma x_i^p$$

$$\Sigma x_i y_i = a_0 \Sigma x_i + a_1 \Sigma x_i^2 + \ldots\ldots\ldots + a_p \Sigma x_i^{p+1}$$

....

$$\Sigma x_i^p y_i = a_0 \Sigma x_i^p + a_1 \Sigma x_i^{p+1} + \ldots\ldots\ldots + a_p \Sigma x_i^{2p+1}$$

என்பவையாகும்.

மேற்கண்ட $(p+1)$ சமன்பாடுகளை **இயல் சமன்பாடுகள்** எனக் கூறுகிறோம். ஏககாலச் சமன்பாடுகளைத் தீர்ப்பதுபோல், மேற்கண்ட $(p+1)$ சமன்பாடுகளைத் தீர்த்து, தேவைப்பட்ட $(p+1)$ மாறு எண்களின் மதிப்பைக் கண்டறியலாம்.

நிகழ்ச்சி I

நேர்கோட்டினைப் பொருத்தல்: முதல் மானமுடைய நேர்கோடு வளைகோட்டை $(y = a_0 + a_1 x)$ மேற்கண்ட குறைந்த வர்க்கக் கொள்கைப்படி பொருத்தினால் கிடைக்கும் சமன்பாடுகள்:

$$\Sigma y = na_0 + a_1 \Sigma x$$

$$\Sigma xy = a_0 \Sigma x + a_1 \Sigma x^2$$

என்பனவாகும்.

இவ்விரண்டு சமன்பாடுகளையும் தீர்த்து, a_0, a_1 என்ற மாறு எண்களின் மதிப்புகளைக் கண்டறிகிறோம்.

நிகழ்ச்சி II

இரு மானப் பரவளைவுச் சமன்பாட்டை $(y = a_0 + a_1 x + a_2 x^2)$ மேற்கண்ட குறைந்த வர்க்கக் கொள்கைப்படி பொருத்தினால் கிடைக்கும் இயல் சமன்பாடுகள்:

$$\Sigma y = na_0 + a_1 \Sigma x + a_2 \Sigma x^2$$

$$\Sigma xy = a_0 \Sigma x + a_1 \Sigma x^2 + a_2 \Sigma x^3$$

$$\Sigma x^2 y = a_0 \Sigma x^2 + a_1 \Sigma x^3 + a_2 \Sigma x^4$$

என்பனவாகும். இம் மூன்று சமன்பாடுகளையும் தீர்த்து, வேண்டிய a_0, a_1, a_2 என்ற மாறா எண்களைக் கணக்கிடலாம்.

மாதிரி 368

x ஐச் சார்பிலா மாறியாகக் கொண்டு கீழ்க்காணும் புள்ளி விவரங்களுக்கு நேர்கோட்டைப் பொருத்துக.

x	0	1	2	3	4
y	1	1·8	3·3	4·5	6·3

(எம்.எஸ்ஸி.—ஆக்ரா—1949)

தீர்வு:

கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப்பட வேண்டிய நேர்கோடு கீழ்க்காணும் நேர்கோடாக இருக்கட்டும்.

$$y=(a+bx)$$

a, b-களைக் கண்டறிய உதவும் இயல் சமன்பாடுகள் (Normal Equations):

$$\Sigma y=(na+b\,\Sigma x)$$

இங்கு, n=கொடுக்கப்பட்ட ஜோடி மதிப்புகளின் எண்ணிக்கை

$$\Sigma xy=(a\,\Sigma x+b\quad x^2)$$

Σx; Σy; Σxy; Σx^2 ஆகியவற்றைக் கணக்கிடல்:

x	y	xy	x^2
0	1	0	0
1	1·8	1·8	1
2	3·3	6·6	4
3	4·5	13·5	9
4	6·3	25·2	16
Σx = 10	Σy = 16·9	Σxy = 47·1	Σx^2 = 30

ஆகவே, மேலே கொடுக்கப்பட்ட இயல் சமன்பாடுகள் கீழ்க் கண்டவாறு ஆகின்றன.

$$16{\cdot}9 = 5a + 10b \quad \ldots(1)$$
$$47{\cdot}1 = 10a + 30b \quad \ldots(2)$$

சமன்பாடு (1)ஐ இரண்டால் பெருக்கி (2) ஆவது சமன்பாட்டிலிருந்து கழிக்கவேண்டும். ஆகவே,

$$47{\cdot}1 = 10a + 30b$$
$$33{\cdot}8 = 10a + 20b$$
$$13{\cdot}3 = 10b$$

$$b = \frac{13{\cdot}3}{10}$$
$$= 1{\cdot}33$$

$b = 1{\cdot}33$ என்பதை முதல் சமன்பாட்டில் பிரதியிட்டால்,

$$5a = 16{\cdot}9 - 13{\cdot}3$$
$$= 3{\cdot}6$$
$$\therefore a = \frac{3{\cdot}6}{5}$$
$$= 0{\cdot}72$$

ஆகவே, கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப் பட்ட நேர்கோட்டின் சமன்பாடு

$$y = 0{\cdot}72 + 1{\cdot}33x$$

மாதிரி 369

ஒரு கன்றுக்குட்டியின் எடை வார இடைவெளிகளில் எடுக்கப்பட்டபோது குறிக்கப்பட்ட எடைகள் கீழே தரப் பட்டுள்ளன. குறைந்த வர்க்கக் கொள்கையைப் பயன்படுத்தி ஒரு நேர் கோட்டு வரையைப் பொருத்திக் காட்டு.

வார இடைவெளி x	1	2	3	4	5
எடை y	52·5	58·7	65·0	70·2	75·4
வார இடைவெளி x	6	7	8	9	10
எடை y	81·1	87·2	95·5	102·2	108·4

(பி.ஏ.—சென்னை—1945)

தீர்வு :

கொடுக்கப்பட்ட x மாறி, சம இடைவெளியைக் கொண்டும், இரட்டைப் படை எண் 10-ஐக் கொண்டுமுள்ளது. மற்றும் x மாறியின் மதிப்புகளின் மத்திய மதிப்பு 5·5 என்று இருக்கிறது. ஆகவே, இங்கு மூலத்தையும் பிரதி அளவையும் (Scale) x மாறிக்கு மாற்றிக் கணக்கிட்டு நேர்கோட்டுச் சமன்பாட்டின் *a*, *b* மதிப்புகளைக் காண்கிறோம்.

Σu; Σy; Σuy; Σu^2 ஆகிய மதிப்புகளைக் கணக்கிடல்:

x	$u = \left(x - \frac{5\cdot5}{0\cdot5}\right) = (2x-11)$	y	uy	u^2
1	−9	52·5	−472·5	81
2	−7	58·5	−410·9	49
3	−5	65·0	−325·0	25
4	−3	70·2	−210.6	9
5	−1	75·4	−75·4	1
6	1	81·1	81.1	1
7	3	87·2	261·6	9
8	5	95·5	477·5	25
9	7	102·2	715·4	49
10	9	108·4	975·6	81
மொத்தம்	$\Sigma u = 0$	$\Sigma y = 796{\cdot}2$	$\Sigma uy = 1016{\cdot}8$	$\Sigma u^2 = 330$

கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப்பட வேண்டிய நேர்கோட்டு வளை

$$y = a + b\,x$$

இங்கு $u = (2x-11)$ என இருக்கும்படி x-மாறியின் மதிப்புகளுக்குப் பதில் புதிய u-மாறியைக் கொண்டு பொருத்தப்படும் நேர்கோட்டு வளையின் சமன்பாடு

$$y = a + bu$$ என்பதாகும்.

a, *b* மதிப்புகளைக் கண்டறிய உதவும் இயல் சமன்பாடுகள் :

$$\Sigma y = na + b\,\Sigma u$$
$$\Sigma uy = a\,\Sigma u + b\,\Sigma u^2$$

Σu, Σy, Σuy, Σu^2 என்ற மதிப்புகளைப் பிரதியிட்ட பின்பு :

$$796 \cdot 2 = 10a + (0 \times b)$$
$$= 10a$$
$$1016 \cdot 8 = (0 \times a) + 330b$$
$$= 330b$$

ஆகவே, $10a = 796 \cdot 2$

$$\therefore a = 79 \cdot 62$$
$$330\, b = 1016 \cdot 8$$
$$\therefore b = 3 \cdot 08$$

மேற்கண்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப்பட்ட நேர் கோட்டு வரை:

$$y = 79 \cdot 62 + 3 \cdot 08u$$
$$= 79 \cdot 62 + 3 \cdot 08\,(2x - 11)$$
$$= 79 \cdot 62 + 6 \cdot 16x - 33 \cdot 88$$
$$= 45 \cdot 74 + 6 \cdot 16x$$

ஆகவே பொருத்தப்பட்ட நேர்கோட்டு வரை

$y = 45 \cdot 74 + 6 \cdot 16x$ என்பதாகும்.

மாதிரி 370

x ஐச் சார்பிலா மாறியாகக் கொண்டு, கீழ்க்காணும் புள்ளி விவரங்களுக்கு ஒரு நேர்கோட்டு வரையைப் பொருத்துக.

x	1	2	3	4	5	6	7
y	39·8	35·2	31·9	34·6	33·8	27·0	31·6

(பி.ஏ.—சென்னைப்பல்கலைக்கழகம்—1944)

தீர்வு :

கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப்பட வேண்டிய நேர்கோட்டு வரை :

$$y = x + b\,x$$

a, *b*-க்களைக் கணக்கிட்டறிய உதவும் இயல்நிலைச் சமன்பாடுகள் :

$$\Sigma y = na + b\,\Sigma x$$
$$\Sigma xy = a\,\Sigma x + b\,\Sigma x^2$$

Σu; Σy; Σuy; Σu^2 ஆகியவற்றைக் கணக்கிடல்:

x	$u = (x-4)$	y	uy	u^2
1	− 3	39·8	− 119·4	9
2	− 2	35·8	− 71·6	4
3	− 1	31·9	− 31·9	1
4	0	34·6	0	0
5	1	33·8	33·8	1
6	2	27·0	54·0	4
7	3	31·6	94·8	9
மொத்தம்	$\Sigma u = 0$	$\Sigma y = 234·5$	$\Sigma uy = -40·3$	$\Sigma u^2 = 28$

கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப்பட வேண்டிய நேர்கோட்டு வளை

$$y = a + bu$$

இங்கு, $u = (x - 4)$

a, b ஆகியவற்றின் மதிப்பைக் கணக்கிட உதவும் இயல்நிலைச் சமன்பாடுகள்:

$$5y = na + b\Sigma u$$
$$\Sigma uy = a\Sigma u + b\Sigma u^2$$

பட்டியலில் கணக்கிட்ட Σu; Σy; Σuy; Σu^2 மதிப்புகளை இயல்நிலைச் சமன்பாடுகளில் பிரதியிட்ட பின்பு,

$$234·5 = 7a + (b \times 0)$$
$$-40·3 = (a \times 0) + (b \times 28)$$

ஆகவே, $7a = 234·5$

$$a = \frac{234·5}{7}$$
$$= 33·5$$
$$28b = -40·3$$
$$b = \frac{-40·3}{28}$$
$$= -1·44$$

எனவே, கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப் பட்ட நேர்கோட்டின் சமன்பாடு:

$$\begin{aligned} y &= 33{\cdot}5 - 1{\cdot}44u \quad \ldots(1) \\ &= 33{\cdot}5 - 1{\cdot}44\,(x-4) \\ &= 33{\cdot}5 - 1{\cdot}44x + 5{\cdot}76 \\ &= 39{\cdot}26 - 1{\cdot}44x \end{aligned}$$

ஆகையால் பொருத்தப்பட்ட நேர்கோட்டு வரை } $y = 39{\cdot}26 - 1{\cdot}44x$ ஆகும்.

மாதிரி 371

கீழ்க்காணும் பட்டியலில் கொடுக்கப்பட்ட புள்ளி விவரங் களுக்கு நேர்கோட்டு வரையைப் பொருத்துக.

x	0	1	2	3	4	5	6	7
y	46	30	16	8	4	3	2	1

(பி எஸ்ஸி.—சென்னை—1961)

தீர்வு:

கொடுக்கப்பட்ட x மாறி, சம இடைவெளியைக் கொண்டும் இரட்டைப்படை எண்ணிக்கையைப் (8 தடவை) பெற்றும் வருகிறது. x மாறியின் மத்திய மதிப்பு 3·5 ஆகும். எனவே, கீழ்க்காணும் முறையில் நேர்கோடு பொருத்துகிறோம்.

x	$u\left(=\dfrac{x-3{\cdot}5}{0{\cdot}5}\right)$	y	uy	u^2
0	−7	46	−322	49
1	−5	30	−150	25
2	−3	16	−48	9
3	−1	8	−8	1
4	1	4	4	1
5	3	3	9	9
6	5	2	10	25
7	7	1	7	49
	0	110	498	168

கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் பொருத்தப்பட வேண்டிய நேர்கோட்டு வளை

$$y = a + bx$$

இங்கு $u = (2x-7)$ என இருக்கும்படி x-மாறியின் மதிப்புகளுக்குப் பதில் u-மாறியைக் கொண்டு பொருத்தப்படும் நேர்கோட்டு வளையின் சமன்பாடு

$y = a + bu$ என்பதாகும்.

a, b மதிப்புகளைக் கண்டறிய உதவும் இயல்நிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma y = na + b\Sigma u$$
$$\Sigma uy = a\Sigma u + b\Sigma u^2$$

Σu, Σy, Σuy, Σu^2 என்ற மதிப்புகளைப் பிரதியிட்ட பின்பு:

$$110 = 8a + (b \times 0)$$
$$= 8a$$
$$498 = a(0) + 168b$$
$$= 168b$$
$$8a = 110$$
$$\therefore a = 13 \cdot 75$$
$$168b = 498$$
$$\therefore b = 2 \cdot 96$$

மேற்கண்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப்பட்ட நேர் கோட்டு வளை :

$$y = 13 \cdot 75 + 2 \cdot 96u$$
$$= 13 \cdot 75 + 2 \cdot 96(2x-7)$$
$$= 13 \cdot 75 + 5 \cdot 92x - 20 \cdot 72$$
$$= -6 \cdot 93 + 5 \cdot 92x$$

ஆகவே, பொருத்தப்பட்ட நேர்கோட்டு வளை

$$y = -6 \cdot 93 + 5 \cdot 92x$$

மாதிரி 372

கீழ்க்காணும் புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப்பட்ட நேர் கோட்டு வளை $y = 0 \cdot 7x + 11 \cdot 28$ எனக் காட்டு.

x	0	5	10	15	20	25
y	12	15	17	22	24	30

(பி.எஸ்ஸி.—ஆக்ரா—1963)

தீர்வு:

கொடுக்கப்பட்ட x மாறி சம இடைவெளியைக் கொண்டும் இரட்டைப்படை எண்ணிக்கையில் (6 தடவை) மதிப்புகளைப் பெற்றும் வருகிறது. மற்றும் x மாறியின் மதிப்புகளின் மத்திய மதிப்பு 12·5 என்றும் இருக்கிறது. ஆகவே, x மாறியின் மூலத்தையும் பிரதியளவையும் மாற்றிக் கணக்கிட்டு நேர்கோட்டுச் சமன்பாட்டின் a, b மதிப்புகளைக் காண்கிறோம்.

Σu; Σy; Σuy; Σu^2 ஆகியவற்றைக் கணக்கிடல் :

x	$u=\left(x-\frac{12\cdot5}{5\times0\cdot5}\right)$ $=\left(\frac{x-12\cdot5}{2\cdot5}\right)$	y	$v=y-20$	uv	u^2
0	−5	12	−8	40	25
5	−3	15	−5	15	9
10	−1	17	−3	3	1
15	1	22	2	2	1
20	3	24	4	12	9
25	5	30	10	50	25
	Σu $=0$		Σv $=0$	Σuv $=122$	Σu^2 $=70$

x, y-மாறிகளின் பிரதியளவுகளை மாற்றிக் கணக்கிட்டு, புதிய u, v மாறிகளுக்கு முதலில் நேர்கோட்டைப் பொருத்துகிறோம்.

u, v-மாறிகளின் பொருத்தப்படவேண்டிய நேர்கோட்டுச் சமன்பாடு:

$$b = a + bu$$

இச் சமன்பாட்டின் இடைநிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma u = na + b\Sigma u$$

$$\Sigma uv = a\Sigma u + b\Sigma u^2$$

$\Sigma u, \Sigma v, \Sigma uv, \Sigma u^2$ என்ற மதிப்புகளைப் பிரதியிட்ட பின்பு.

$$0 = 6a + (0 \times b)$$
$$122 = (0 \times a) + 70b$$
$$\therefore a = 0$$
$$b = 1{\cdot}743$$

ஆகவே, மேற்கண்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப்பட்ட நேர்கோட்டு வளை:

$$v = 1{\cdot}743u$$

அல்லது $(y-20) = (1{\cdot}743) \times \left[\frac{(x-125)}{2{\cdot}5}\right]$

$$= 0{\cdot}7x - 8{\cdot}715$$

ஆகவே, பொருத்தப்பட்ட நேர்கோட்டு வளை

$$y = 0{\cdot}7x + 11{\cdot}285$$

மாதிரி 373

கீழ்க்காணும் பட்டியல் பஞ்சாபில் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு நுகர் பொருளின் அளவைத் தருகிறது. நேர்கோட்டு வளையைப் பொருத்துக.

ஆண்டு x	1911	1921	1931	1941	1951
உற்பத்தி (1000 டன்களில்) y	10	12	8	10	14

1936ஆம் ஆண்டின் உற்பத்தியை மதிப்பிடுக.

(பி.எஸ்ஸி.—ஆக்ரா)

தீர்வு:

கொடுக்கப்பட்ட மாறி சம இடைவெளியைக் கொண்டும் ஒற்றைப்படை எண்ணிக்கையிலும் (5 தடவை) வருகிறது. தொடர் எண்களின் இடைவெளி 10 எனவும் காண்கிறோம். ஆகவே, இங்கு மூலத்தையும் பிரதி அளவையும் x மாறிக்கு மாற்றிக் கணக்கிட்டு நேர்கோட்டுச் சமன்பாட்டையும் a, b மதிப்புகளையும் காண்கிறோம்.

Σu; Σy; Σuy; Σu^2 ஆகிய மதிப்புகளைக் கணக்கிடல்:

x	$u\left(=\frac{x-1931}{10}\right)$	y	uy	u^2
1911	−2	10	−20	4
1921	−1	12	−12	1
1931	0	8	0	0
1941	1	10	10	1
1951	2	14	28	4
மொத்தம்	$\Sigma u = 0$	$\Sigma y = 54$	$\Sigma uy = 6$	$\Sigma u^2 = 10$

கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப்பட வேண்டிய நேர்கோட்டு வரை:

$$y = a + bu$$

இங்கு, $yu = \frac{x-1931}{10}$

a, b ஆகியவற்றின் மதிப்பைக் கணக்கிட உதவும் இயல்நிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma y = na + b\Sigma u$$
$$\Sigma uy = a\Sigma u + b\Sigma u^2$$

பட்டியலில் கணக்கிட்ட Σu; Σuy; Σu^2 மதிப்புகளை இயல்நிலைச் சமன்பாடுகளில் பிரதியிட்ட பின்பு:

$$54 = 5a + (b \times 0) \quad \ldots(1)$$
$$6 = (a \times 0) + (b \times 10) \quad \ldots(2)$$

ஆகவே, $5a = 54$

$$\therefore a = \frac{54}{5}$$
$$= 10 8$$
$$10b = 6$$
$$\therefore b = 0 6$$

எனவே, கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப் பட்ட நேர்கோட்டின் சமன்பாடு:

$$y = 10{\cdot}8 + 0{\cdot}6u \qquad \ldots(3)$$
$$= 10{\cdot}8 + 0{\cdot}6\left(\frac{x-1931}{10}\right)$$
$$= 126{\cdot}66 + 0{\cdot}06x$$

இச் சமன்பாட்டைப் பயன்படுத்தி 1936ஆம் ஆண்டின் உற்பத்தி அளவை மதிப்பிட வேண்டும்.

$$x = 1936$$
என்றால், $u = \left(\frac{x-1931}{10}\right)$
$$= \frac{1936-1931}{10}$$
$$= 0\,5$$

3ஆவது சமன்பாட்டிலிருந்து,

$$y = 10{\cdot}8 + (0{\cdot}6 \times 0{\cdot}5)$$
$$= 11\,1$$

ஆகவே, 1936ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட உற்பத்தி

= **11·1** (ஆயிரம் டன்கள்)

மாதிரி 374

கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் ஓர் ஆலையில் உற்பத்தி ஆகும் சர்க்கரையின் அளவைத் (1000 டன்களில்) தருகிறது. ஒரு நேர்கோட்டு வளையைப் பொருத்துக.

ஆண்டு	1950	1951	1952	1953	1954	1955
உற்பத்தி (1000 டன்களில்)	50	54	53	62	68	75

கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்கு ஒரு வரைபடம் வரைந்து போக்குக் கோட்டைக் காட்டவும். 1957ஆம் ஆண்டு உற்பத்தியைக் கணக்கிடவும்.

(பி.ஏ.—சென்னை—1972)

தீர்வு:

I முதல் முறை:

ஆண்டு x	உற்பத்தி y	u	u^2	uy
1950	50	−2	4	−100
1951	54	−1	1	−54
1952	53	0	0	0
1953	62	1	1	62
1954	68	2	4	136
1955	75	3	9	225
மொத்தம்	362	3	19	269

பொருத்தப்பட வேண்டிய வளை,

$$y = a + bx$$

இங்கு, $u=(x-1952)$ என இருக்கும்படி x மாறியின் மதிப்புக்குப் பதில் u மாறியைக் கொண்டு பொருத்தப்படும் நேர்கோட்டு வளையின் சமன்பாடு,

$y = a + bu$ என்பதாகும்.

இயல் சமன்பாடுகள்:

$$\Sigma y = na + b\Sigma u$$
$$\Sigma uy = a\Sigma u + b\Sigma u^2$$

$\Sigma u, \Sigma y$........மதிப்புகளைப் பிரதியிட்ட பின்பு,

$$362 = 6a + 3b$$
$$269 = 3a + 19b$$

மேற்கண்ட சமன்பாடுகளைத் தீர்த்த பின்பு கீழ்க்காணும் மதிப்புகளை அடைகிறோம்.

$$a = 57{\cdot}82$$
$$b = 5{\cdot}03$$

எனவே, பொருத்தப்பட்ட நேர்கோட்டு வளை

$$y = 57{\cdot}82 + 5{\cdot}03u$$

இங்கு, $u = (x-1952)$ ஆகும்.

(a) பொருத்தப்பட்ட வளைகோட்டு வரைபடம் வரையத் தேவைப்படும் புள்ளிகள்:

$x = 1950$ எனில் $u = -2$

$y = 57{\cdot}82 + 5{\cdot}03\,(-2)$

$= 47{\cdot}76$

முதல் புள்ளி $(u, y) = (-2, 47{\cdot}76)$

$x = 1951$ எனில், $u = -1$;

$y = 57{\cdot}82 + 5{\cdot}03\,(-1)$

$= 52{\cdot}79$

இரண்டாம் புள்ளி $(u, y) = (-1, 52{\cdot}79)$

$x = 1952$ எனில், $u = 0$

$y = 57{\cdot}82$

மூன்றும் புள்ளி $(u, y) = (0, 57{\cdot}82)$

$x = 1953$ எனில், $u = 1$

$y = 57{\cdot}82 + (5{\cdot}03) \times 1$

$= 62{\cdot}85$

நான்காம் புள்ளி $(u, y) = (1, 62{\cdot}85)$

$x = 1954$ எனில், $u = 2$

$y = 57{\cdot}82 + 5{\cdot}03\,(2)$

$= 67{\cdot}88$

ஐந்தாம் புள்ளி $(u, y) = (2, 67{\cdot}88)$

$x = 1955$ எனில், $u = 3$

$y = 57{\cdot}82 + 5{\cdot}03\,(3)$

ஆறும் புள்ளி $(u, y) = (3, 72{\cdot}91)$

இப் புள்ளிகளைக் கொண்டு வரைபடத்தில் நேர்கோட்டைப் பொருத்திக் காட்டலாம்.

(b) 1957ஆம் ஆண்டு உற்பத்தியைக் கணக்கிடல்:

$x = 1957$ எனில், $u = 5$

$y = 57{\cdot}82 + 5{\cdot}03 \times 5$

$= 82{\cdot}97$

எனவே, 1957ஆம் ஆண்டு உற்பத்தி 82·97 (1000 டன்கள்) ஆகும்.

II இரண்டாம் முறை:

$u = 2\,(x - 1952{\cdot}5)$; $v = (y - 50)$ என இருக்கட்டும்.

ஆண்டு x	உற்பத்தி y	u	v	u^2	uv
1950	50	−5	0	25	0
1951	54	−3	4	9	−12
1952	53	−1	3	1	−3
1953	62	1	12	1	12
1954	68	3	18	9	54
1955	75	5	25	25	125
		0	62	70	176

பொருத்தப்பட வேண்டிய நேர்கோட்டு வரை

$$y = a + bu$$

எடுத்துக்கொண்ட வரை

$$v = a + bu$$

இயல்நிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma v = na + b\Sigma u$$

$$\Sigma uv = a\Sigma u + b\Sigma u^2$$

பட்டியலில் கண்ட Σu, Σv,……மதிப்புகளைப் பிரதியிட்ட பின்பு:

$$62 = 6a + b(0)$$

$$176 = a(0) + 70a$$

இச் சமன்பாடுகளைத் தீர்த்த பின்பு கிடைக்கும் மதிப்புகள்:

$$a = 10{\cdot}3$$

$$b = 2{\cdot}5$$

ஆகவே, பொருத்தப்பட்ட வரைகோடு

$$v = 10{\cdot}3 + 2{\cdot}5u$$

இங்கு, $u = 2\,(x - 1952{\cdot}5)$

$$v = y - 50$$

அல்லது, $y - 50 = 20{\cdot}3 + 2{\cdot}5u$

அல்லது, $y = 60{\cdot}3 + 2{\cdot}5u$

இங்கு, $u = 2\,(x - 1952{\cdot}5)$

(*b*) 1957–ம் ஆண்டு உற்பத்தியைக் கணக்கிடல்:

$x = 1957$ எனில், $u = 9$

$$\therefore y = 60{\cdot}3 + (2{\cdot}5 \times 9)$$
$$= 82{\cdot}8$$

எனவே, 1957ஆம் ஆண்டு உற்பத்தி 82·8 (1000 டன்கள்) ஆகும்.

மாதிரி 375

வேலையில்லாத் திண்டாட்ட நிலையினை விளக்கும் கீழ்க் காணும் பட்டியலுக்கேற்ற ஒரு நேர்கோடு காண்க.

ஆண்டு	1945	1946	1947	1948
மொத்தத் தொழில் நிலையில் வேலையற்றோரின் விதம்	2·1	2·2	3·0	5·1

ஆண்டு	1949	1950	1951	1952
மொத்தத் தொழில் நிலையில் வேலையற்றோரின் விதம்	6·4	6.7	7·2	7·9

1959–ல் வேலையற்றோரின் சதவீதம் என்ன?

(சென்னை—பல்கலைக் கழகம்)

தீர்வு:

நேர்கோட்டு வரை பொருத்தல்:

ஆண்டு x	வேலையற்றோர் சதவீதம் y	$u = 2(x - 1948{\cdot}5)$	u^2	uy
1945	2·1	−7	49	−14·7
1946	2·2	−5	25	−11·0
1947	3·0	−3	9	− 9·0
1948	5·1	−1	1	− 5·1
1949	6·4	1	1	6·4
1950	6·7	3	9	20·1
1951	7·2	5	25	36·0
1952	7·9	7	49	55·3
$n=8$	40·6	0	168	78

பொருத்தப்படவேண்டிய வரைகோடு

$$y = a + bx$$

எடுத்துக்கொண்ட நேர்கோட்டு வரை

$$y = a + bu$$

இங்கு, $u = 2(x - 1948{\cdot}5)$

இயல் நிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma y = na + b\Sigma u$$
$$\Sigma uy = a\Sigma u + b\Sigma u^2$$

பட்டியலில் கண்ட Σu, Σu^2, Σy.........மதிப்புகளைப் பிரதியிட்ட பின்பு:

$$40{\cdot}6 = 8a + b\,(0)$$
$$78 = a\,(0) + 168b$$

ஆகவே, $8a = 40{\cdot}6$

$$a = 5{\cdot}075$$
$$168b = 78$$
$$\therefore\; b = 0{\cdot}46$$

மேற்கண்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப்பட்ட நேர் கோட்டு வளை:

$$y = 5{\cdot}075 + 0{\cdot}46u$$

இங்கு, $u = 2(x - 1948{\cdot}5)$ ஆகும்.

1959-ம் ஆண்டின் வேலையற்றவரின் சதவீதம் காணல்:

$x = 1959$ எனில், $u = 21$

$$y = 5{\cdot}075 + 0{\cdot}46\,(21)$$
$$= 14{\cdot}735$$

ஆகவே, 1959ஆம் ஆண்டின் வேலையற்றவர்களின் சதவீதம்

$$= 14{\cdot}735\%$$

இருபடிப் பரவளைவு

மாதிரி 376

கீழ்க்காணும் புள்ளி விவரங்களுக்கு ஓர் இருபடிப் பரவளைவு பொருத்துக.

x	0	1	2	3	4
y	1	5	10	22	38

(எம். எஸ்ஸி.—ஆக்ரா—1958)

தீர்வு:

முதல் முறை:

கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப்பட வேண்டிய பரவளைவு பின் வருமாறு:

$$y = a + bx + cx^2$$

இவ்விருபடிப் பரவளைவைப் பொருத்தப் பயன்படுத்தப்படும் இயல் நிலைச் சமன்பாடு:

$$\Sigma y = na + b\Sigma x + c\Sigma x^2$$
$$\Sigma xy = a\Sigma x + b\Sigma x^2 + c\Sigma x^3$$
$$\Sigma x^2 y = a\Sigma x^2 + b\Sigma x^3 + c\Sigma x^4$$

Σx; Σy; Σxy; Σx^2.........களைக் கணக்கிடல்:

x	y	xy	x^2	x^2y	x^3	x^4
0	1	0	0	0	0	0
1	5	5	1	5	1	1
2	10	20	4	40	8	16
3	22	66	9	198	27	81
4	38	152	16	608	64	256
$\Sigma x = 10$	$\Sigma y = 76$	$\Sigma xy = 243$	$\Sigma x^2 = 30$	$\Sigma x^2y = 851$	$\Sigma x^3 = 100$	$\Sigma x^4 = 354$

மேலே கொடுக்கப்பட்ட இயல் நிலைச் சமன்பாடுகளில் Σx, Σy, Σxy.........களைப் பிரதியிட்டால்:

$$76 = 5a + 10b + 30c$$
$$243 = 10a + 30b + 100c$$
$$851 = 30a + 100b + 354c$$

மேற்கண்ட சமன்பாடுகளைத் தீர்த்த பின்பு கீழ்க்காணும் மதிப்புகளை அடைகிறோம்:

$$a = 1{\cdot}43; \quad b = 0{\cdot}24; \quad c = 2{\cdot}21$$

ஆகவே, மேற்கண்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப்பட்ட இருபடிப் பரவளைவு:

$$y = 1{\cdot}43 + 0{\cdot}24x + 2{\cdot}21x^2$$

இரண்டாவது முறை:

$$u = x - 2$$
$$v = y - 15$$

Σu, Σv, Σuv .... களைக் கணக்கிடல்:

u	v	uv	u^2	u^2v	u^3	u^4
−2	−14	28	4	−56	−8	16
−1	−10	10	1	−10	−1	1
0	−5	0	0	0	0	0
1	7	7	1	7	1	1
2	23	46	4	92	8	16
$\Sigma u = 0$	$\Sigma v = 1$	$\Sigma uv = 91$	$\Sigma u^2 = 10$	$\Sigma u^2v = 33$	$\Sigma u^3 = 0$	$\Sigma u^4 = 34$

பொருத்தப்பட வேண்டிய இருபடிப் பரவளைவு :

$$v = a + bu + cu^2$$

இங்கு, $v = y - 15$

$$u = x - 2$$

இவ்விருபடிப் பரவளைவு காணப் பயன்படுத்தப்படும் இயல் நிலைச் சமன்பாடுகள் :

$$\Sigma v = na + b\Sigma u + c\Sigma u^2$$
$$\Sigma uv = a\Sigma u + b\Sigma u^2 + c\Sigma u^3$$
$$\Sigma u^2 v = a\Sigma u^2 + b\Sigma u^3 + c\Sigma u^4$$

பட்டியலில் கண்டறிந்த Σu, Σv, Σuv.........ஆகிய மதிப்புகளைச் சமன்பாட்டில் பிரதியிட்ட பின்பு :

$$1 = 5a + (0 \times b) + (10 \times c)$$
$$91 = (0 \times a) + 10b + (0 \times c)$$
$$33 = 10a + (0 \times b) + 34c$$

அல்லது,

$$1 = 5a + 10c$$
$$91 = 10b$$
$$33 = 10a + 34c$$

மேற்கண்ட சமன்பாடுகளைத் தீர்வு கண்டபின் கிடைக்கும் மதிப்புகள் :

$$a = -4{\cdot}25$$
$$b = 9{\cdot}08$$
$$c = 2{\cdot}21$$

ஆகவே, பொருத்தப்பட்ட இருபடிப் பரவளைவு :

$$v = +4{\cdot}25 - 9{\cdot}08u + 2{\cdot}21u^2$$
$$(y-15) = +4{\cdot}25 - 9{\cdot}08\,(x-2) + 2{\cdot}21\,(x-2)^2$$
$$= +4{\cdot}25 - 9{\cdot}08x - 18{\cdot}16 + 2{\cdot}21x^2 - 8{\cdot}84x + 8{\cdot}84$$
$$\therefore y = 1{\cdot}43 + 0{\cdot}24x + 2{\cdot}21x^2$$

மாதிரி 377

(*a*) *x* ஐச் சார்பற்ற மாறியாகக் கொண்டு கீழ்க் காணும் புள்ளி விவரங்களுக்கு ஓர் இருபடிப் பரவளைவு பொருத்துக.

x	0	1	2	3	4
y	1	1·8	1·3	2·5	6·3

(எம்.எஸ்ஸி.—ஆக்ரா—1956)
(பி.எஸ்ஸி.—சென்னை—1961)

(*b*) $x=2$ என இருக்கும்பொழுது y-ன் உண்மையான மதிப்பிற்கும், பொருத்தப்பட்ட இருபடிப் பரவலைவு மூலம் கண்டறிந்த y-ன் மதிப்பிற்கும் உள்ள வித்தியாசத்தைக் காண்.

(பி.எஸ்ஸி.—லக்னோ—1952)

தீர்வு :

(*a*) முதல் முறை:

கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப்பட வேண்டிய இருபடிப் பரவலைவு பின் வருமாறு :

$$y = a + bx + cx^2$$

இவ்விருபடிப் பரவலைவைப் பொருத்தப் பயன்படுத்தப்படும் இயல்நிலைச் சமன்பாடுகள் :

$$\left\{\begin{aligned} \Sigma y &= na + b\Sigma x + c\Sigma x^2 \\ \Sigma xy &= a\Sigma x + b\Sigma x^2 + c\Sigma x^3 \\ \Sigma x^2y &= a\Sigma x^2 + b\Sigma x^3 + c\Sigma x^4 \end{aligned}\right.$$

Σx; Σy; Σxy; Σx^2 .... களைக் கணக்கிடல்:

x	y	xy	x^2	x^2y	x^3	x^4
0	1	0	0	0	0	0
1	1·8	1·8	1	1·8	1	1
2	1·3	2 6	4	5·2	8	16
3	2·5	7·5	9	22·5	27	81
4	6·3	25·2	16	100·8	64	256
Σx = 10	Σy = 12·9	Σxy = 37·1	Σx^2 = 30	Σx^2y = 130.3	Σx^3 = 100	Σx^4 = 354

மேலே கொடுக்கப்பட்ட இயல் நிலைச் சமன்பாடுகளில் Σx, Σy, Σxy, Σx^2 .... களைப் பிரதியிட்டால்:

$$\begin{aligned} 12{\cdot}9 &= 5a + 10b + 30c \\ 37{\cdot}1 &= 10a + 30b + 100c \\ 130{\cdot}3 &= 30a + 100b + 350c \end{aligned}$$

மேற்கண்ட சமன்பாடுகளைத் தீர்த்தபின்பு கீழ்க்காணும் மதிப்புகளை அடைகிறோம்.

$$\begin{aligned} a &= 1{\cdot}42 \\ b &= 1{\cdot}07 \\ c &= 0{\cdot}55 \end{aligned}$$

ஆகவே, மேற்கண்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப்பட்ட இருபடிப் பரவளைவு:

$$y = 1{\cdot}42 - 1{\cdot}07x + 0{\cdot}55x^2$$

(b) $x^2 = 2$ என்றால், $y = 1{\cdot}42 - 2{\cdot}14 + 2{\cdot}20$

$$= 1{\cdot}48$$

ஆகவே, y-ன் உண்மையான மதிப்பிற்கும், பொருத்தப்பட்ட இருபடிப் பரவளைவு மூலம் கண்டறிந்த y-ன் மதிப்பிற்கும் உள்ள வித்தியாசம்

$$= 1{\cdot}3 - 1{\cdot}48$$
$$= -0{\cdot}18$$

இரண்டாவது முறை:

$u = x - 2$ என இருக்கட்டும்.

Σu; Σy; Σuy; Σu^2 ...... களைக் கணக்கிடல்:

x	u $(= x - 2)$	y	uy	u^2	u^2y	u^3	u^4
0	−2	1	−2	4	4	−8	16
1	−1	1·8	−1·8	1	1·8	−1	1
2	0	1·3	0	0	0	0	0
3	1	2·5	2·5	1	2·5	1	1
4	2	6·3	12·6	4	25·2	8	16
மொத்தம்	$\Sigma u = 0$	$\Sigma y = 12{\cdot}9$	$\Sigma uy = 11{\cdot}3$	$\Sigma u^2 = 10$	$\Sigma u^2y = 33{\cdot}5$	$\Sigma u^3 = 0$	$\Sigma u^4 = 34$

பொருத்தப்படவேண்டிய இருபடிப் பரவளைவு:

$$y = a + bu = cu^2$$

இங்கு, $u = (x - 2)$

இருபடிப் பரவளைவு காண, பயன்படுத்தப்படும் இயல் நிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma y = na + b\Sigma u + c\Sigma u^2$$
$$\Sigma uy = a\Sigma u + b\Sigma u^2 + c\Sigma u^3$$
$$\Sigma u^2y = a\Sigma u^2 + b\Sigma u^3 + c\Sigma u^4$$

பட்டியலில் கண்டறிந்த Σu; Σy; Σuy ...... ஆகிய மதிப்புகளைச் சமன்பாட்டில் பிரதியிட்ட பின்பு :

$$12{\cdot}9 = 5a + 0 + 10c$$
$$11{\cdot}3 = 0 + 10b + 0$$
$$33{\cdot}5 = 10a + 0 + 34c$$

மேற்கண்ட சமன்பாடுகளைத் தீர்வு கண்டபின் கிடைக்கும் மதிப்புகள் :

$$a = 1{\cdot}48$$
$$b = 1{\cdot}13$$
$$c = 0{\cdot}55$$

ஆகவே, பொருத்தப்பட்ட இருபடிப் பரவளைவு :

$$y = 1{\cdot}48 + 1{\cdot}13u + 0{\cdot}55u^2$$
$$= 1{\cdot}48 + 1{\cdot}13\,(x-2) + 0{\cdot}55\,(x-2)^2$$
$$= 1{\cdot}42 - 10{\cdot}7x + 0{\cdot}55x^2$$

(அல்லது) $y = 1{\cdot}42 - 10{\cdot}7x + 0{\cdot}55x^2$

(*b*) $x = 2$ ஆக இருக்கும் பொழுது,

$$y = 1{\cdot}48 + 1{\cdot}13\,(2-2) + 0{\cdot}55\,(2-2)^2$$
$$= 1{\cdot}48$$

ஆகவே, y-ன் உண்மையான மதிப்பிற்கும், பொருத்தப்பட்ட இருபடிப் பரவளைவு மூலம் கண்டறிந்த y-ன் மதிப்பிற்கும் உள்ள வித்தியாசம்

$$= 1{\cdot}3 - 1{\cdot}48$$
$$= -0{\cdot}18$$

மாதிரி 378

கீழ்க்காணும் புள்ளி விவரங்களுக்கு $y = ax^2 + bx + c$ என்ற இருபடிப் பரவளைவைப் பொருத்தவும். பின்பு, இதைப் பயன்படுத்தி $x = 36$ ஆக இருக்கும் பொழுது y-ன் மதிப்பைக் கணக்கிடவும்.

x	y	x	y
18	43	28	86
20	49	30	78
22	57	32	69
24	66	34	61
26	75		

(பி.எஸ்ஸி.—சென்னை—1972)

தீர்வு :

$\Sigma u, \Sigma y, \Sigma uy, \Sigma u^2$ ....மதிப்புகளைக் காணல்:

x	u	y	Σuy	u^2	u^2y	u^3	u^4
18	—4	43	—172	16	688	—64	256
20	—3	49	—147	9	441	—27	81
22	—2	57	—114	4	228	—8	16
24	—1	66	—66	1	66	—1	1
26	0	75	0	0	0	0	0
28	1	86	86	1	86	1	1
30	2	78	156	4	312	8	16
32	3	69	207	9	621	27	81
34	4	61	244	16	976	64	256
$n = 9$	$\Sigma u = 0$	$\Sigma y = 584$	$\Sigma uy = 194$	$\Sigma u^2 = 60$	$\Sigma u^2y = 3418$	$\Sigma u^3 = 0$	$\Sigma u^4 = 708$

பொருத்தப்படவேண்டிய வளைகோடு:

$$y = ax^2 + bx + c$$

எடுத்துக்கொண்டு பொருத்தப்படும் வளைகோடு:

$$y = au^2 + bu + c$$

இங்கு $u = \left(\frac{x - 26}{2}\right)$ என எடுத்துக்கொள்கிறோம்.

இவ்விருபடிப் பரவளைவு காணப் பயன்படுத்தப்படும் இயல்நிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma y = a\Sigma u^2 + b\Sigma u + nc$$

$$\Sigma uy = a\Sigma u^3 + b\Sigma u^2 + c\Sigma u$$

$$\Sigma u^2y = a\Sigma u^4 + b\Sigma u^3 + c\Sigma u^2$$

பட்டியலில் கண்டறிந்த $\Sigma u, \Sigma y, \Sigma uy$......... ஆகிய மதிப்புகளைச் சமன்பாட்டில் பிரதியிட்ட பின்பு:

$$584 = 60a + b(0) + 9c$$

$$194 = a(0) + 60b + c(0)$$

$$3418 = 708a + b(0) + 60c$$

மேற்கண்ட சமன்பாடுகளைத் தீர்வு கண்ட பின்பு கிடைக்கும் மதிப்புகள்:

$$a = -1{\cdot}54$$
$$b = 3{\cdot}23$$
$$c = 75{\cdot}16$$

ஆகவே, பொருத்தப்பட்ட இருபடிப் பரவளைவு:

$$y = -154u^2 + 3{\cdot}23u + 75{\cdot}16$$

இங்கு, $u = \left(\frac{x - 26}{2}\right)$ ஆகும்.

மாதிரி 379

ஒரு நிறுவனம் நிறுவப்பட்டு அதன் x ஆவது ஆண்டின் இலாபங்கள் £ $100y$, கீழே தரப்பட்டுள்ளன.

x	1	2	3	4	5
y	25	28	33	39	46

$u = (x - 3)$; $v = (y - 33)$ என எடுத்துக்கொண்டு 'u சார்ந்த v' எனும் ஒட்டுறவுப் பரவளைவு

$$u = a + bu + cu^2$$

என்பதைக் காண்.

(எம். எஸ்ஸி.—ஆக்ரா—1952)

தீர்வு:

எடுத்துக்கொண்ட இருப்படிப் பரவளைவு அல்லது ஒட்டுறவுப் பரவளைவு:

$$v = a + bu + cu^2 \text{ ஆகும்.}$$

இப்பரவளைவு பொருத்தப் பயன்படுத்தப்படும் இயல்நிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma v = na + b\Sigma u + c\Sigma u^2$$
$$\Sigma uv = a\Sigma u + b\Sigma u^2 + c\Sigma u^3$$
$$\Sigma u^2v = a\Sigma u^2 + b\Sigma u^3 + c\Sigma u^4$$

என்பனவாகும்.

Σu, Σv, Σuv... .....களைக் கணக்கிடல்:

x	y	u	v	uv	u^2	u^2v	u^3	u^4
1	25	—2	—8	16	4	—32	—8	16
2	28	—1	—5	5	1	—5	—1	1
3	33	0	0	0	0	0	0	0
4	39	1	6	6	1	6	1	1
5	46	2	13	26	4	52	8	16
மொத்தம்		$\Sigma u = 0$	$\Sigma v = 6$	$\Sigma uv = 53$	$\Sigma u^2 = 10$	$\Sigma u^2v = 21$	$\Sigma u^3 = 0$	$\Sigma u^4 = 34$

பட்டியலில் கண்டறிந்த Σu, Σv.........என்ற மதிப்புகளை இயல் நிலைச் சமன்பாடுகளில் பிரதியிட்ட பின்பு,

$$6 = 5a + 0 + 10c$$
$$53 = 0 + 10b + 0$$
$$21 = 10a + 0 + 34c$$

மேற்கண்ட சமன்பாடுகளைத் தீர்வு கண்ட பின்பு கிடைக்கும் மதிப்புகள்:

$$a = 0{\cdot}086$$
$$b = 5{\cdot}3$$
$$c = 0{\cdot}643$$

பொருத்தப்பட்ட இருப்படிப் பரவளைவு:

$$v = -0{\cdot}086 - 5{\cdot}3u + 0{\cdot}643u^2$$

இங்கு, $u = p\,(-3)$

$v = (y-33)$ ஆகும்.

மாதிரி 380

கீழ்க்காணும் புள்ளி விவரங்களுக்கு ஓர் இருபடிப் பரவளைவைப் பொருத்துக.

x	1	2	3	4	5
y	1090	1220	1390	1625	1915

தீர்வு:

விலக்க முறை:

x-மாறியின் மூல அளவாக 3 ஐக் கொள்வோம்.
ஆகவே, $u = x - 3$

y மாறியின் மூலமாக 1450 ஐயும், படியாக 5 ஐயும் கொள்வோம்.

ஆகவே, $v = \dfrac{y - 1450}{5}$

Σu, Σv, Σuv, Σu^2.........களைக் கணக்கிடல்:

x	y	u	v	uv	u^2	u^2v	u^3	u^4
1	1090	—2	—72	144	4	—288	—8	16
2	1220	—1	—46	46	1	—46	—1	1
3	1390	0	—12	0	0	0	0	0
4	1625	1	35	35	1	35	1	1
5	1915	2	93	186	4	372	8	16
மொத்தம்		$\Sigma u = 0$	$\Sigma v = -2$	$\Sigma uv = 411$	$\Sigma u^2 = 10$	$\Sigma u^2v = 73$	$\Sigma u^3 = 0$	$\Sigma u^4 = 34$

பொருத்தப்படவேண்டிய இருபடிப் பரவளைவு:

$$v = a + bu + cu^2$$

இங்கு $v = \dfrac{y - 1450}{5}$

$$u = x - 3$$

இவ்விருபடிப் பரவளைவு காணப் பயன்படுத்தப்படும் இயல்நிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma v = na + b\Sigma u + c\Sigma u^2$$
$$\Sigma uv = a\Sigma u + b\Sigma u^2 + c\Sigma u^3$$
$$\Sigma u^2v = a\Sigma u^2 + b\Sigma u^2 + c\Sigma u^4$$

பட்டியலில் கண்டறிந்த Σu, Σv, Σuv.........ஆகிய மதிப்புகளைச் சமன்பாட்டில் பிரதியிட்ட பின்பு:

$$-2 = 59 + 0 + 10c$$
$$411 = 0 + 10b + 0$$
$$73 = 10a + 0 + 34c$$

மேற்கண்ட சமன்பாடுகளைத் தீர்வு கண்ட பின்பு கிடைக்கும் மதிப்புகள்:

$$a = -11{\cdot}4$$
$$b = 41{\cdot}1$$
$$c = 5{\cdot}5$$

ஆகவே, கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப் படவேண்டிய இருபடிப் பரவளைவு:

$$v = -11{\cdot}4 + 41{\cdot}1u + 5{\cdot}5u^2$$

மூலங்களை மாற்றிய பின்பு:

$$1/5\,(y - 1450) = -11{\cdot}4 + 41{\cdot}1\,(x-3) + 5{\cdot}5\,(x-3)^2$$
$$(y-1450) = 5\,[-11{\cdot}4 + 41{\cdot}1\,(x-3) + 5{\cdot}5\,(x-3)^2]$$
$$y = 5\,[-11{\cdot}4 + 41{\cdot}1\,x - 123{\cdot}3 + 5{\cdot}5\,(x^2-6x+9)] + 1450$$
அல்லது $y = 1024 + 40{\cdot}5x + 27{\cdot}5x^2$

மாதிரி 381

x ஐச் சார்பிலா மாறியாகக் கொண்டு ஓர் இருபடிப் பரவளைவு பொருத்திக் காட்டுக.

x	1	2	3	4	5	6	7	8	9
y	2	6	7	8	10	11	11	10	9

(எம் எஸ்ஸி.—ஆக்ரா—1953; 1967)

(பி.காம்.—டெல்லி—1954; 1956)

தீர்வு:

சுருக்க முறை:

x மாறியின் மூல அளவாக 5ஐக் கொள்வோம்.

ஆகவே, $u = (x-5)$

y மாறியின் மூல அளவாக 7ஐக் கொள்வோம்.

ஆகவே, $v = (y-7)$

Σu, Σv, Σuv, Σu^2.........களைக் கணக்கிடல் :

x	y	u	v	uv	u^2	u^2v	u^3	u^4
1	2	—4	—5	20	16	—80	—64	256
2	6	—3	—1	3	9	—9	—27	31
3	7	—2	0	0	4	0	—8	16
4	8	—1	1	—1	1	1	—1	1
5	10	0	3	0	0	0	0	0
6	11	1	4	4	1	4	1	1
7	11	2	4	8	4	16	8	16
8	10	3	3	9	9	27	27	31
9	9	4	2	8	16	32	64	356
		Σu $=0$	Σv $=11$	Σuv $=51$	Σu^2 $=60$	Σu^2v $=-9$	Σu^3 $=0$	Σu^4 $=708$

பொருந்தப்படவேண்டிய இருபடிப் பரவலைவு:

$$v = a + bu + cu^2$$

இங்கு $v = (y-7)$

$u = (x-5)$

இவ் விருபடிப் பரவலைவு காணப் பயன்படுத்தப்படும் இயல் நிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma u = na + b\Sigma u + c\Sigma u^2$$
$$\Sigma uv = a\Sigma u + b\Sigma u^2 + c\Sigma u^3$$
$$\Sigma u^2v = a\Sigma u^2 + b\Sigma u^3 + c\Sigma u^4$$

பட்டியலில் கண்டறிந்த Σu Σv, Σuv.........ஆகிய மதிப்புகளைச் சமன்பாட்டில் பிரதியிட்ட பின்பு:

$$11 = 9a + 0 + 60c$$
$$51 = 0 + 60b + 0$$
$$-9 = 60a + 0 + 708c$$

மேற்கண்ட சமன்பாடுகளைத் தீர்வு கண்டபின் கிடைக்கும் மதிப்புகள்:

$a = 3{\cdot}0$

$b = 0{\cdot}85$

$c = 0{\cdot}27$

ஆகவே, கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப்பட்ட இருபடிப் பரவளைவு:

$$u = 3 + 0{\cdot}85u + 0{\cdot}27u^2$$

அல்லது $(y-7) = 3 + 0{\cdot}85\,(x-5) - 0{\cdot}27\,(x-5)^2$

அல்லது $y = -1{\cdot}0 + 3{\cdot}55x - 0{\cdot}27x^2$

மாதிரி 382

கீழ்க் காணும் பட்டியலில் உள்ள ஏழு ஜோடி மதிப்புகளின் 'x சார்ந்த y' என்ற ஒட்டுறவிற்கு, ஓர் இருபடிப் பரவளைவினைப் பொருத்திக் காட்டுக.

x	1·0	1·5	2·0	2·5	3·0	3·5	4·0
y	1·1	1·3	1·6	2·0	2·7	3·4	4·1

(எம்.எஸ்ஸி.—ஆக்ரா—1954, 1968)

(பி.எஸ்ஸி.—சென்னை—1961)

தீர்வு :

$$u = \frac{x - 25}{0{\cdot}5} = 2x-5 \text{ ஆக இருக்கட்டும்.}$$

பின்பு Σu; Σy; Σuy; Σu^2.........ஆகியவைகளைக் கணக்கிடல்:

x	u $(=2x-5)$	y	uy	u^2	u^2y	u^3	u^4
1·0	—3	1·1	—3·3	9	9·9	—27	81
1·5	—2	1·3	—2·6	4	5·2	—8	16
2·0	—1	1·6	—1·6	1	1·6	—1	1
2·5	0	2·0	0	0	0	0	0
3·0	1	2·7	2·7	1	2·7	1	1
3·5	2	3·4	6·8	4	13·6	8	16
4·0	3	4·1	12·3	9	36·9	27	81
	$\Sigma u = 0$	$\Sigma y = 16{\cdot}2$	$\Sigma uy = 14{\cdot}3$	$\Sigma u^2 = 0$	$\Sigma u^2y = 69{\cdot}9$	$\Sigma u^3 = 0$	$\Sigma u^4 = 196$

பொருத்தப்பட வேண்டிய இருபடிப் பரவளைவு :

$$y = a + bu + cu^2$$

இங்கு, $u = (2x-5)$ ஆகும்.

இவ் விருபடிப் பரவளைவு காணப் பயன்படுத்தப்படும் இயல்நிலைச் சமன்பாடுகள் :

$$\Sigma y = na + b\Sigma u + c\Sigma u^2$$
$$\Sigma uy = a\Sigma u + b\Sigma u^2 + c\Sigma u^3$$
$$\Sigma u^2 y = a\Sigma u^2 + b\Sigma u^3 + c\Sigma u^4$$

பட்டியலில் கண்டறிந்த Σu, Σu Σuy ....ஆகிய மதிப்புகளைச் சமன்பாட்டில் பிரதியிட்ட பின்பு:

$$16{\cdot}2 = 7a + 0 + 28c$$
$$14{\cdot}3 = 0 + 28b + 0$$
$$69{\cdot}9 = 28a + 0 + 196c$$

மேற்கண்ட சமன்பாடுகளைத் தீர்வு கண்டபின் கிடைக்கும் மதிப்புகள்:

$$a = 2{\cdot}07$$
$$b = 0{\cdot}511$$
$$c = 0{\cdot}061$$

ஆகவே, பொருத்தப்பட்ட இருபடிப் பரவளைவு:

$$y = 2{\cdot}07 + 0{\cdot}511u + 0{\cdot}061u^2$$
$$= 2{\cdot}07 + 0{\cdot}511\,(2x-5) + 0{\cdot}061\,(2x-5)^2$$
$$= 1{\cdot}04 - 0{\cdot}198x + 0{\cdot}244x^2$$

அதாவது $\quad y = 1{\cdot}04 - 0{\cdot}198x + 0{\cdot}244x^2$

மாதிரி 383

ஒரு நிறுவனத்தின் 5 ஆண்டுகளின் இலாப விவரங்களைக் கீழ்க் காணும் பட்டியல் தருகிறது:

ஆண்டு	1960	1961	1962	1963	1964
இலாபம் (லட்சத்தில்)	12	14	16	19	25

மேற்கண்ட புள்ளி விவரங்களுக்கு ஓர் இருபடிப் பரவளைவைப் பொருத்தி, 1966-ம் ஆண்டின் இலாபத்தை மதிப்பிடுக.

(பி.ஏ.—சென்னை—1972)

தீர்வு:

கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப்பட வேண்டிய பரவளைவு பின் வருமாறு:

$$y = a + bx + cx^2$$

சுருக்கு முறை:

ஆண்டுகளுக்கு மூல அளவாக 1962-ஆம் ஆண்டைக் கொள்ளவும்.

ஆகவே, $u = (x - 1962)$

$\Sigma u;\ \Sigma y;\ \Sigma uy;\ \Sigma u^2$.........களைக் கணக்கிடல்:

ஆண்டு x	u $(= x - 1962)$	இலாபம் (லட்சத்தில்) y	uy	u^2	u^2y	u^3	x^4
1960	—2	12	—24	4	48	—8	16
1961	—1	14	—14	1	14	—1	1
1962	0	16	0	0	0	0	0
1963	1	19	19	1	19	1	1
1964	2	25	50	4	100	8	16
	$\Sigma u = 0$	$\Sigma y = 86$	Σuy 31	$\Sigma u^2 = 10$	$\Sigma u^2y = 181$	$\Sigma u^3 = 0$	$\Sigma u^4 = 34$

பொருத்தப்படவேண்டிய இருபடிப் பரவளைவு:

$$y = a + bu + cu^2$$

இங்கு, $u = (x - 1962)$

இவ்விருபடிப் பரவளைவு காணப் பயன்படுத்தப்படும் இயல்நிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma y = na + b\Sigma u + c\Sigma u^2$$
$$\Sigma uy = a\Sigma u + b\Sigma u^2 + c\Sigma u^3$$
$$\Sigma u^2y = a\Sigma u^2 + b\Sigma u^3 + c\Sigma u^4$$

பட்டியலில் கண்டறிந்த Σu, Σy, Σuy........ஆகிய மதிப்புகளைச் சமன்பாட்டில் பிரதியிட்ட பின்பு:

$$36 = 5a + 0 + 10c$$
$$31 = 0 + 10b + 0$$
$$181 = 10a + 0 + 34c$$

மேற்கண்ட சமன்பாடுகளைத் தீர்வு கண்ட பின்பு கிடைக்கும் மதிப்புகள்:

$$a = 15{\cdot}92$$
$$b = 3{\cdot}1$$
$$c = 0{\cdot}643$$

ஆகவே, பொருத்தப்பட்ட இருபடிப் பரவளைவு:

$$y = 15{\cdot}92 + 3{\cdot}1u + 0{\cdot}643u^2$$

இங்கு $u = (x - 1962)$ ஆகும்.

(b) 1966–ம் ஆண்டின் இலாபத்தைக் கணக்கிடல்:

$x = 1966$ ஆம் ஆண்டு எனில், $u = 4$

$$y = 15{\cdot}92 + 3{\cdot}1\,(4) + 0{\cdot}643\,(16)$$
$$= 15{\cdot}92 + 12{\cdot}4 + 10{\cdot}288$$
$$= \mathbf{38\ 608}$$

ஆகவே, 1966ஆம் ஆண்டின் இலாபம்

= ரூ. **38·608** (லட்சங்கள்)

மாதிரி 384

கீழ்க் காணும் பட்டியல் சில ஆண்டுகளில் விலைவாசிகளைக் கொடுக்கிறது. ஓர் இருபடிப் பரவளைவைப் புள்ளி விவரங்களுக்குப் பொருத்திக் காட்டுக.

ஆண்டு	விலைவாசி	ஆண்டு	விலைவாசி
1875	88	1881	85
1876	87	1882	84
1877	81	1883	90
1878	78	1884	92
1879	74	1885	100
1880	79		

(திருவனந்தபுரம்—1943)

தீர்வு:

சுருக்கு முறை:

ஆண்டுகளுக்கு மூல அளவாக 1880ஆம் ஆண்டைக் கொள்வோம்.

ஆகவே, $u = x - 1880$

அதேபோல் விலைவாசிகளுக்கு மூல அளவாக 85ஐக் கொள்வோம்.

ஆகவே, $v = y - 85$

$\Sigma u, \Sigma v, \Sigma uv, \Sigma u^2 \ldots \ldots$ களைக் கணக்கிடல்:

ஆண்டு x	விலைவாசி y	$u = (x - 1880)$	$v (= y - 85)$	uv	u^2	u^2v	u^3	u^4
1875	88	−5	−3	−15	25	75	−125	625
1876	87	−4	2	−8	16	32	−64	256
1877	81	−3	−4	12	9	−36	−27	81
1878	78	−2	−7	14	4	−28	−8	16
1879	74	−1	−11	11	1	−11	−1	1
1880	79	0	−6	0	0	0	0	0
1881	85	1	0	0	1	0	1	1
1882	84	2	−1	−2	4	−4	8	16
1883	90	3	5	15	9	45	27	81
1884	92	4	7	28	16	112	64	256
1885	100	5	15	75	25	375	125	625
மொத்தம்		$\Sigma u = 0$	$\Sigma v = 3$	$\Sigma uv = 130$	$\Sigma u^2 = 110$	$\Sigma u^2v = 560$	$\Sigma u^3 = 0$	$\Sigma u^4 = 1958$

பொருத்தப்படவேண்டிய இருபடிப் பரவளைவு:

$$v = a + bu + cu^2$$

இங்கு, $v = y - 85$

$$u = x - 1880$$

இவ்விருபடிப் பரவளைவு காணப் பயன்படுத்தப்படும் இயல்நிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma u = na + b\Sigma u + c\Sigma u^2$$
$$\Sigma uv = a\Sigma u + b\Sigma u^2 + c\Sigma u^3$$
$$\Sigma u^2v = a\Sigma u^2 + b\Sigma u^3 + c\Sigma u^4$$

பட்டியலில் கண்டறிந்த Σu, Σv, Σuv......... ஆகிய மதிப்புகளைச் சமன்பாட்டில் பிரதியிட்ட பின்பு:

$$3 = 11a + 0 + 110c$$
$$130 = 0 + 110b + 0$$
$$560 = 110a + 0 + 1958c$$

மேற்கண்ட சமன்பாடுகளை தீர்வு கண்டபின் கிடைக்கும் மதிப்புகள்:

$$a = \frac{-2533}{429}$$
$$b = \frac{13}{11}$$
$$c = \frac{265}{429}$$

ஆகவே, பொருத்தப்பட்ட இருபடிப் பரவளைவு:

$$v = \frac{-2533}{429} + \frac{13}{11} u + \frac{265}{429} u^2$$
$$y - 85 = \frac{-2533}{429} + \frac{13}{11} u + \frac{265}{429} u^2$$

அல்லது, $y = -5{\cdot}9 - 1{\cdot}18u + 0{\cdot}617u^2 + 85$

$= 79{\cdot}1 + 1{\cdot}18u + 0{\cdot}617u^2$

ஆகவே, பொருத்தப்பட்ட இருபடிப் பரவளைவு:

$$y = 79{\cdot}1 + 1{\cdot}18u + 0{\cdot}617u^2$$

இங்கு, $u = x - $ **1880** என இருக்கிறது.

மாதிரி 385

கீழ்க்காணும் பட்டியல் இந்தியாவின் ஏழு தொடர்ந்த மக்கள்தொகைக் கணக்கெடுப்புகளின்போது இருந்த மக்கள் தொகையைத் தருகிறது. மக்கள்தொகை வளர்ச்சியை விளக்கும் ஓர் இருபடிப் பரவளைவைப் பொருத்துக. எச்சங்களின் கூடுதலையும் கணக்கிடுக.

ஆண்டு	1881	1891	1901	1911	1921	1931	1941
மக்கள் தொகை (மில்லியன்களில்)	257	229	284	303	306	338	389

(சென்னைப் பல்கலைக் கழகம்—டிப்—1957

தீர்வு:

x மாறியின் மூல அளவாக 1911 ஐக் கொண்டு 10 ஆண்டுகளை ஓர் அலகாகக் கொண்டால்,

$$u = \frac{x - 1911}{10}$$

y மாறியின் மூலமாக 303 ஐக் கொள்வோம்.

ஆகவே, $v = (y - 303)$

$\Sigma u, \Sigma v, \Sigma uv, \Sigma u^2$ ....களைக் கணக்கிடல்:

x	y	u	v	uv	u^2	u^2v	u^3	u^4
1881	257	—3	—46	138	9	—414	—27	81
1891	279	—2	—24	48	4	—96	—8	16
1901	284	—1	—19	19	1	—19	—1	1
1911	303	0	0	0	0	0	0	0
1921	306	1	3	3	1	3	1	1
1931	338	2	35	70	4	140	8	16
1941	389	3	86	258	9	774	27	81
மொத்தம்		$\Sigma u = 0$	$\Sigma v = 35$	$\Sigma uv = 536$	$\Sigma u^2 = 28$	$\Sigma u^2v = 388$	$\Sigma u^3 = 0$	$\Sigma u^4 = 196$

பொருத்தப்படவேண்டிய இருபடிப் பரவளைவு:

$$v = a + bu + cu^2$$

இங்கு, $v = (y - 303)$

$$u = \frac{x - 1911}{10}$$

இவ்விருபடிப் பரவளைவு காணப் பயன்படுத்தப்படும் இயல்நிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma v = na + b\Sigma u + c\Sigma u^2$$
$$\Sigma uv = a\Sigma u + b\Sigma u^2 + c\Sigma u^3$$
$$\Sigma u^2v = a\Sigma u^2 + b\Sigma u^3 + c\Sigma u^4$$

பட்டியலில் கண்டறிந்த Σu Σv, Σuv ....ஆகிய மதிப்புகளைச் சமன்பாட்டில் பிரதியிட்ட பின்பு:

$$35 = 7a + 0 + 28c$$
$$536 = 0 + 28b + 0$$
$$388 = 28c + 0 + 196c$$

மேற்கண்ட சமன்பாடுகளைத் தீர்வு கண்டபின்பு கிடைக்கும் மதிப்புகள்:

$$a = -6{\cdot}8096$$
$$b = 19{\cdot}143$$
$$c = 2{\cdot}9524$$

ஆகவே, கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப்பட்ட இருபடிப் பரவளைவு:

$$u = -6{\cdot}8096 + 19{\cdot}143u + 2{\cdot}9524u^2$$

அல்லது, $y - 303 = -6{\cdot}8096 + 19{\cdot}143u + 2{\cdot}9524u^2$

அல்லது, $y = 296{\cdot}1904 + 19{\cdot}143u + 2{\cdot}9524u^2$

இங்கு, $u = \dfrac{x - 1911}{10}$ ஆகும்.

எச்சங்களின் கூடுதல்:

$$= \Sigma v^2 + a\Sigma vu^2 + b\Sigma vu + c\Sigma v$$
$$= 11683 - (2{\cdot}9524)(388) - (19{\cdot}143)(536) + (6{\cdot}8096)(35)$$
$$= \mathbf{515{\cdot}157}$$

மாதிரி 386

(a) கீழ்க்காணும் வளர்ச்சிப் புள்ளி விவரங்களுக்கு ஓர் இருபடிப் பரவளைவினைப் பொருத்தவும்.

பின்பு,

(i) ஓர் ஆண்டு வயது முடிந்தவுடன் அச் செடியின் உயரம் எவ்வளவாக இருக்கும் என மதிப்பிடுக.

(ii) வரைகோட்டுப் பட விளக்கம் மூலம் கண்டறிந்த உயரங்களையும் பொருத்தப்பட்ட பரவளைவினையும் காட்டுக.

முடிவடைந்த மாதங்களின் எண்ணிக்கை	செடியின் உயரம் (செ. மீட்டரில்)	முடிவடைந்த மாதங்களின் எண்ணிக்கை	செடியின் உயரம் (செ. மீட்டரில்)
1	5	6	59
2	10	7	75
3	16	8	94
4	31	9	117
5	43	10	143

(பி.எஸ்ஸி.—சென்னை—1972)

தீர்வு

$u = (2x - 11)$ எனக் கொள்க. இருபடிப் பரவளைவு பொருத்தல்:

x	u	y	uy	u^2	uy^2	u^3	u^4
1	−9	5	−45	81	405	−729	6561
2	−7	10	−70	49	490	−343	2401
3	−5	16	−80	25	400	−125	625
4	−3	31	−93	9	279	−27	81
5	−1	43	−43	1	43	−1	1
6	1	59	59	1	59	1	1
7	3	75	225	9	675	27	81
8	5	94	470	25	2350	125	625
9	7	117	819	49	5733	343	2401
10	9	143	1287	81	11583	729	6561
$n = 10$	$\Sigma u = 0$	$\Sigma y = 593$	$\Sigma uy = 2529$	$\Sigma u^2 = 330$	$\Sigma u^2 y = 22017$	$\Sigma u^3 = 0$	$\Sigma u^4 = 19338$

பொருத்தப்படவேண்டிய இருபடிப் பரவளைவு:

$$y = a + bx + cx$$

எடுத்துக்கொண்ட இருபடிப் பரவளைவு:

$$y = a + bu + cu^2$$

இங்கு, $u = (2x - 11)$

இவ்விருபடிப் பரவளைவு காணப் பயன்படுத்தப்படும் இயல்நிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma y = na + b\Sigma u + c\Sigma u^2$$
$$\Sigma uy = a\Sigma u + b\Sigma u^2 + c\Sigma u^3$$
$$\Sigma u^2 y = a\Sigma u^2 + b\Sigma u^3 + c\Sigma u^4$$

பட்டியலில் கண்டறிந்த மதிப்புகளைப் பிரதியிட்ட பின்பு:

$$593 = 10a + b(0) + 330c$$
$$2529 = a(0) + b(330) + c(0)$$
$$22017 = 330a + b(0) + 19338c$$

மேற்கண்ட சமன்பாடுகளைத் தீர்வு கண்டபின்பு:

$$a = 49{\cdot}73$$
$$b = 7{\cdot}66$$
$$c = 0{\cdot}29$$

ஆகவே, கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப் பட்ட இருபடிப் பாவளைவு:

$$y = 49{\cdot}73 + 7{\cdot}66u + 0{\cdot}29u^2$$

இங்கு, $u = (2x - 11)$

(i) ஓர் ஆண்டு வயதை முடித்தவுடன் செடியின் உயரம் காணல்:

1 ஆண்டு = 12 மாதம். எனில், $u = 13$

$$\therefore\ y = 49{\cdot}73 + 7{\cdot}66\,(13) + 0{\cdot}29\,(13)^2$$
$$= 49{\cdot}73 + 99{\cdot}58 + 49{\cdot}01$$
$$= 198{\cdot}32 \text{ செ. மீ.}$$

ஆகவே, ஓர் ஆண்டு வயதை முடித்தவுடன், அச்செடியின் உயரம் = **198·32** செ. மீ.

பெரும்பாலும் உண்மைபோல் தோன்றும் (Most Plausible) மதிப்புகள்:

மாதிரி 387

கீழ்க்காணும் சமன்பாடுகளிலிருந்து x, y, z என்பனவற்றின் பெரும்பாலும உண்மைபோல் தோன்றும் (most plausible) மதிப்புகளைக் கணக்கிடுக.

$$x - y + 2z = 3;$$
$$3x + 2y - 5z = 5;$$
$$4x + y + 4z = 21;$$
$$-x + 3y + 3z = 14.$$

(பி. ஏ.—பஞ்சாப்—1956)

தீர்வு:

எச்சங்கள்: $(x - y + 2z - 3)$; $(3x + 2y - 5z - 5)$; $(4x + y + 4z - 21)$; $(-x + 3y + 3z - 14)$ என்பனவாகும்.

எச்ச வர்க்கங்களின் கூடுதல் கீழ்க்காணும்படி இருக்கட்டும்:

$$S = (x - y + 2z - 3)^2 + (3x + 2y - 5z - 5)^2 + (4x + y + 4z - 21)^2 + (-x + 3y + 3z - 14)^2$$

பெரும்பாலும் உண்மைபோலத் தோன்றும் மதிப்புகள் கீழ்க் காணும் இயல்நிலைச் சமன்பாடுகளால் கொடுக்கப்படும்.

$$\frac{\partial S}{\partial x}=0;\quad \frac{\partial S}{\partial y}=0;\quad \frac{\partial S}{\partial z}=0.$$

ஆகவே,

$$(x-y+2z-3)+3\,(3x+2y-5z-5)$$
$$+4\,(4x+y+4z-21)-(-x+3y+3z-14)=0$$
$$-(x-y+2z-3)+2\,(3x+2y-5z-5)+$$
$$(4x+y+4z-21)+3\,(3-x+3y+3z-14)=0$$
$$2\,(x-y+2z-3)-5\,(3x+2y-5z-5)$$
$$+4\,(4x+y+4z-21)+3\,(-x+3y+3z-14)=0$$

சுலபமாக்கிய பின்பு சமன்பாடுகள்:

$$27x+6y=88$$
$$6x+15y+3=70$$
$$y+54z=107$$

இச் சமன்பாடுகளின் தீர்வைக் கண்ட பின்பு கிடைக்கும் மதிப்புகள்:

$$x=2{\cdot}47$$
$$y=3{\cdot}55$$
$$z=1{\cdot}92$$

இவைகளே பெரும்பாலும் உண்மைபோலத் தோன்றும் x, y, z என்பனவற்றின் மதிப்புகளாகும்.

மாதிரி 388

கீழ்க் காணும் சமன்பாடுகளின் இயல்நிலைச் சமன்பாடுகளைக் கண்டு, x, y என்பனவற்றின் பெரும்பாலும் உண்மையெனத் தோன்றும் (most plausible) மதிப்புகளைக் கணக்கிடுக:

$$x+y=3{\cdot}01;\quad 2x-y=0{\cdot}03$$
$$x+3y=7{\cdot}03;\quad 3x-y=4{\cdot}97$$

(எம். எஸ்ஸி.—ஆக்ரா—1961)

தீர்வு:

கொடுக்கப்பட்ட சமன்பாடுகளின் எச்சங்கள்:

$x+y-3{\cdot}01$; $2x-y-0{\cdot}03$; $x+3y-7{\cdot}03$; $3x+y-4{\cdot}97$ என்பனவாகும்.

எச்சங்களின் வர்க்கக் கூடுதல் கீழ்க் காணும்படி இருக்கட்டும்.

$$S=(x+y-3{\cdot}01)^2+(2x-y-0{\cdot}03)^2$$
$$+(x+3y-7{\cdot}03)^2+(3x+y-4{\cdot}97)^2$$

பெரும்பாலும் உண்மைபோலத் தோன்றும் மதிப்புகள் கீழ்க் காணும் இயல்நிலைச் சமன்பாடுகளால் கொடுக்கப்படும்.

$$\frac{\partial S}{\partial x}=0;\quad \frac{\partial S}{\partial y}=0;$$

ஆகவே,

$$x+y-3{\cdot}01+2\,(2x-y-0{\cdot}03)+$$
$$(x+3y-7{\cdot}03)+3\,(3x+y-4{\cdot}97)=0$$
$$x+y-3{\cdot}01-(2x-y-0{\cdot}03)$$
$$+3\,(x+3y-7{\cdot}03)+(3x+y-4{\cdot}97)=0$$

சுலபமாக்கிய பின்பு சமன்பாடுகள்:

$$15x+5y-25{\cdot}01=0$$
$$5x+12y-29{\cdot}04=0$$

(அல்லது)

$$\frac{x}{-145{\cdot}20+300{\cdot}12}=\frac{y}{-125{\cdot}05+435{\cdot}60}=\frac{1}{180-25}$$

(அல்லது)

$$\frac{x}{154{\cdot}92}=\frac{y}{310{\cdot}55}=\frac{1}{155}$$

இவற்றைத் தீர்த்தவுடன் கிடைக்கும் மதிப்புகள்:

$$x=0{\cdot}997$$
$$y=2{\cdot}001$$

இவைகளே பெரும்பாலும் உண்மைபோலத் தோன்றும் x, y என்பனவற்றின் மதிப்புகளாகும்.

லாகரீதப (மடக்கை) வழியில் பொருத்தும் வளைகோடுகள்

I $y = Ae^{Bx}$

II $y = Ax^{m}$

III $y = ab^{x}$

மாதிரி 389

கீழ்க்காணும் பட்டியல், ஓர் உலோகத் துண்டின் இழு விசைச் சோதனையில் கண்டறிந்த புள்ளி விவரங்களைக் கொடுக்கிறது. இங்கு, $x=$ சுமை (டன்னில்); $y=$ நீளச் செய்த அளவு

(ஓர் அங்குலத்தின்—பத்தாயிரத்தில்). பொருத்தமான $y = Ae^{Bx}$ என்ற வடிவ வளைகோட்டினைப் பொருத்திக் காட்டுக.

x	1	2	3	4	5	6
y	14	27	40	55	68	300

(சென்னை—பல்கலை—1944)

தீர்வு·

ΣY; Σx; ΣYx......... ஆகியவைகளைக் கணக்கிடல்:

$X = x$	y	$Y = \log y$	XY	X^2
1	14	1·1461	1·1461	1
2	27	1·4313	2·8628	4
3	40	1·6021	4·8063	9
4	55	1·7404	6·9616	16
5	68	1·8325	9·1625	25
6	300	2·4771	14·8626	36
மொத்தம்		$\Sigma Y = 10{\cdot}2296$	$\Sigma XY = 39{\cdot}8019$	$\Sigma X^2 = 91$

பொருத்தப்படவேண்டிய வடிவம் $y = Ae^{Bx}$

இரு பக்கங்களிலும் மடக்கை எடுக்கவும்:

$$\log_{10} Y = \log_{10} A + Bx \log_{10} e$$

(அல்லது) $Y = a + bX$

இங்கு, $Y = \log y$

$A = \log a$

$b = B \log e$

$X = x$

ஆகவே, $A = a$-ன் எதிர் மடக்கை

$$B = \frac{b}{\log e}$$

a, b என்ற மதிப்புகளைக் கண்டறியப் பயன்படும் இயல்நிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma Y = na + b\Sigma x$$
$$\Sigma xY = a\Sigma + b\Sigma x^2$$

பட்டியலில் கண்ட மதிப்புகளைச் சமன்பாட்டில் பிரதியிட்டால்:

$$10{\cdot}2296 = 6a + 21b$$
$$39{\cdot}8019 = 21a + 91b$$

இச் சமன்பாடுகளுக்குத் தீர்வு கண்டபின்பு கிடைக்கும் மதிப்புகள்:

$$a = 0{\cdot}9052$$
$$b = 0{\cdot}2285$$

இங்கு, $A = a$-ன் எதிர் மடக்கை

$= 0{\cdot}9052$-ன் எதிர் மடக்கை

$= \mathbf{8{\cdot}039}$

$$B = \frac{b}{log_{10}e}$$
$$= \frac{0{\cdot}2285}{0{\cdot}4343}$$
$$= 0{\cdot}5261$$

ஆகவே, கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப் படவேண்டிய வளைவு வடிவ

$$y = 8{\cdot}039\, e^{0{\cdot}5261x}$$

மாதிரி 390

(i) $y = ax + \frac{b}{x}$

(ii) $y = ax^b$

என்ற வகைப்படி, கொடுக்கப்பட்ட n ஜோடிக் கண்டறிந்த புள்ளி விவரங்களில் குறைந்த வர்க்கக் கொள்கைப்படி எப்படிப் பொருத்துவாய் எனக் காட்டுக.

(பி. ஏ.—சென்னை—1951)

தீர்வு:

(i) $y = ax + \frac{b}{x}$

கொடுக்கப்பட்ட n புள்ளிகள் $(x_i\ y_i)$; $i = 1, 2, 3 \ldots\ldots\ldots n$ என்று இருக்கட்டும்.

i ஆவது புள்ளியின் எச்சம் $= Y_i - ax_i - \frac{b}{x_i}$ ஆகும்.

ஆகவே, வர்க்கங்களின் கூடுதல்:

$$S = \sum_{i=1}^{n} \left(Y - ax_i - \frac{b}{x_i} \right)^2$$

எனவே, கொடுக்கப்பட்ட வளைவைப் பொருத்தப் பயன்படும் சமன்பாடுகள்:

$$\frac{\partial S}{\partial a} = 0; \ \frac{\partial S}{\partial a} = 0.$$

இச் சமன்பாடுகளைச் சுருக்கக் கிடைக்கும் சமன்பாடுகள் முறையே:

$$\Sigma xy = a\Sigma x^2 - nb \quad \ldots(1)$$

$$\Sigma \frac{y}{x} = na - b\Sigma \frac{1}{x^2} \quad \ldots(2)$$

எனவே; (i), (ii) என்ற இயல் நிலைச் சமன்பாடுகளைப் பயன்படுத்திக் கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குக் கேட்கப்பட்ட பரவளைவைப் பொருத்தலாம்.

(ii) $Y = ax^b$ -- பொருத்தப்படவேண்டிய வளைகோட்டின் வடிவம் இரு பக்கத்திலும் மடக்கை எடுக்கவும்.

$$log_{10} Y = log_{10} a + b\ log_{10} x$$

அல்லது, $Y = A + Bx$ ஆகும்.

இங்கு, $Y =$ மடக்கை 10^y

$A =$ மடக்கை 10

$B = b$

$X =$ மடக்கை 10^x

ஆகவே, $Y = A + BX$ என்ற நேர்கோட்டு வளையைப் பொருத்தப் பயன்படும் இயல்நிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma Y = nA + B\Sigma X \quad \ldots(1)$$

$$\Sigma XY = A\Sigma x + B\Sigma X^2 \quad \ldots(2)$$

எனவே, (1), (2) என்ற இயல்நிலைச் சமன்பாடுகளைப் பயன் படுத்தி, கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குக் கேட்கப் பட்ட $y=ax^b$ என்ற வடிவப் பரவளைவைப் பொருத்தலாம்.

மாதிரி 391

கீழ்க்காணும் புள்ளி விவரங்களுக்கு $Y=ae^{bx}$ என்ற வளை கோட்டைப் பொருத்துக.

x	5	6	7	8	9	10
y	133	55	23	7	2	2

(திருவனந்தபுரம் பல்கலை)

தீர்வு:

ΣY, Σx, ΣYx .... ஆகியவைகளைக் கணக்கிடல்:

$X=x$	y	$Y=\log y$	XY	X^2
5	133	2·1239	10·6195	25
6	55	1·7404	10·4424	36
7	23	1·3617	9·5319	49
8	7	0·8451	6·7608	64
9	2	0·3010	2·7090	81
10	2	0·3010	3·0100	100
45	—	ΣY $=6·6731$	ΣXY $=43·0736$	ΣX^2 $=355$

பொருத்தப்படவேண்டிய வளைவு வடிவம்

$$Y=Ae^{bx}$$

இரு பக்கத்திலும் மடக்கை எடுக்கவும்:

$$\log_{10} y=\log_{10}a+bx\log_{10}e$$

$$Y=A+BX$$

இங்கு, $Y = \log y$

$A = \log a$

$B = B \log e$

$X = x$

ஆகவே, $a = A$-ன் எதிர் மடக்கை

$$b = \frac{B}{\log e}$$

a, b களைக் கண்டறியப் பயன்படும் இயல்நிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma Y = nA + B\Sigma X$$

$$\Sigma XY = A\Sigma X + B\Sigma X^2$$

பட்டியலில் கண்டறிந்த மதிப்புகளைச் சமன்பாட்டில் பிரதியிட்ட பின்பு:

$$6{\cdot}6731 = 6A + 45B$$

$$43{\cdot}0736 = 45A + 355B$$

இச் சமன்பாடுகளுக்குத் தீர்வு கண்டபின்பு கிடைக்கும் மதிப்புகள்:

$$A = 4{\cdot}1013$$

$$B = -0{\cdot}39855$$

இங்கு, $a = A$-ன் எதிர் மடக்கை

$= \mathbf{12630}$

$$b = \frac{B}{\log_{10} e}$$

$$= \frac{-0{\cdot}39855}{0{\cdot}4343}$$

$$= -\mathbf{0{\cdot}92}$$

ஆகவே, கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப் பட்ட வளைவு விவரம்:

$$y = \mathbf{12630}\, e^{-0{\cdot}92x}$$

மாதிரி 392

கீழ்க்காணும் புள்ளி விவரங்களுக்கு $y = cx^k$ என்ற வடிவ வளைகோட்டினைப் பொருத்துக:

x	10	18	25	36
y	16	34	63	110

(பி.எஸ்ஸி.—சென்னை—1972)

தீர்வு:

பொருத்தப் படவேண்டிய வளைகோட்டு வடிவம்

$$y = cx^k$$

இரு பக்கத்திலும் (லாக்) மடக்கை எடுக்கவும்:

$$\log y = \log c + k \log x$$

அல்லது, $Y = A + BX$

இங்கு $Y = \log y$

$A = \log c$

$B = k$

$X = \log x$

A, B மதிப்புகளைக் கணக்கிட்டறிய உதவும் இயல்நிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma Y = B\Sigma X + nA \quad \ldots(1)$$

$$\Sigma XY = B\Sigma X^2 + A\Sigma X \quad \ldots(2)$$

ΣX ΣY, ΣX^2 ... ... ஆகியவைகளைக் கணக்கிடல்:

x	y	X $(=\log x)$	$Y = (\log y)$	XY	X^2
10	16	1·0000	1·2041	1·2041	1·0000
18	34	1·2553	1·5315	1·9125	1·5876
25	63	1·3979	1·7993	2·5150	1·9600
36	110	1·5563	1·5563	3·1758	2·4336
மொத்தம்	$n = 4$	5·2095	6·5763	8·8074	6·9812

பட்டியலில் கண்ட மதிப்புகளை இயல்நிலைச் சமன்பாட்டில் பிரதியிட்டால்:

$$6·5763 = 4A + 5·2095B$$

$$8·8074 = 5·2095A + 6·9812B$$

இச் சமன்பாடுகளுக்குத் தீர்வு கண்டபின்பு A, B-க்களின் தோராய மதிப்பு:

$$A = 0·35 \text{ (தோராயமாக)}$$

$$B = 1·03 \text{ (தோராயமாக)}$$

ஆகவே, c, k களின் மதிப்பு:

$$c = A\text{-ன் எதிர் மடக்கை}$$
$$= 0{\cdot}35\text{-ன் எதிர் மடக்கை}$$
$$= 2{\cdot}239$$
$$k = B$$
$$= 1{\cdot}03$$

ஆகையால், கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப்பட்ட வளைவு வடிவம்:

$$y = 0{\cdot}30\ x^{1{\cdot}03}$$

மாதிரி 393

கீழ்க் காணும் புள்ளி விவரங்களுக்கு, $y = ax^b$ என்ற வடிவ வளைகோட்டினைப் பொருத்துக.

x	1	2	3	4	5	6
y	1200	900	600	200	110	50

(திருவனந்தபுரம் பல்கலைக் கழகம்)

தீர்வு:

பொருத்தப்படவேண்டிய வளைகோட்டு வடிவம் $y = ax^b$. இருபக்கத்திலும் மடக்கை எடுக்கவும்:

$$\log y = \log a + b \log x$$

அல்லது, $Y = A + Bx$

இங்கு, $Y = \log y$

$A = \log a$

$B = b$

$X = \log x$

A, B மதிப்புகளைக் கணக்கிட்டறிய உதவும் இயல்நிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma Y = B\Sigma X + nA \qquad \ldots(1)$$
$$\Sigma XY = B\Sigma X^2 + A\Sigma X \qquad \ldots(2)$$

ΣY, ΣX, ΣX^2.........ஆகியவைகளைக் கணக்கிடல்:

x	y	$X\ (=\log x)$	$Y\ (=\log y)$	XY	X^2
1	1200	·0000	3·0792	0	0
2	900	·3010	2·9542	0·885	0·091
3	600	·4771	2·7782	1·334	0·227
4	200	·6021	2·3010	1·587	0·362
5	110	·6991	2·0414	1·426	0·489
6	50	·7782	1·6990	1·325	0·605
மொத்தம்	$n=6$	$\Sigma X = 2·8575$	$\Sigma Y = 14·8530$	$\Sigma XY = 6·557$	$\Sigma X^2 = 1·774$

பட்டியலில் கண்ட மதிப்புகளை இயல்நிலைச் சமன்பாட்டில் பிரதியிட்டால்

$$14·8530 = 6A + 2·8575\,B$$
$$6·557 = 2·8575A + 1·774\,B$$

இச் சமன்பாடுகளுக்குத் தீர்வு கண்ட பின்பு **A, B**-க்களின் தோராய மதிப்பு:

$A = 3·14$ (தோராயமாக)

$B = -1·4$ (தோராயமாக)

ஆகவே, a, b-க்களின் மதிப்பு:

a = A-ன் எதிர் மடக்கை

= 3·14-ன் எதிர் மடக்கை

= 1380

$b = B$

$= -1·4$

ஆகவே, கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப் படவேண்டிய வளைவு வடிவம்:

$$y = 1380\,x^{-1·4}$$

மாதிரி 394

(i) $pv^m = k$ என்ற வளைகோட்டு வடிவத்தைப் பொருத்தப் பயன்படுத்தப்படும் இயல்நிலைச் சமன்பாடுகளை எழுதவும்.

இங்கு, k = நிலைத்த எண்

p = வாயுவின் அழுத்தம்

v = வாயுவின் கன அளவு

என்று பொருள் படுகிறது.

(ii) p-ஐச் சார்பிலா மாறியாகக் கொண்டு கீழ்க் காணும் புள்ளிவிவரங்களுக்கு மேற்கண்ட வளைகோட்டைப் பொருத்தவும்.

p (கி. கிராம்/செ.மீ.^{2})	0·5	1·0	1·5	2·0	2·5	3·0
v (லிட்டர்களில்)	1620	1000	750	620	520	460

(பி.எஸ்ஸி.—ஆக்ரா—1960)

தீர்வு:

(i) பொருத்தப்படவேண்டிய சமன்பாடு:

$$pv^m = k$$

இரு பக்கத்திலும் மடக்கை எடுக்கவும்:

$$\log_{10}p + m\log_{10}v = \log_{10}k$$

அல்லது, $\log_{10}v = \dfrac{1}{m}\log_{10}k - \dfrac{1}{m}\log_{10}p$

அல்லது, $Y = a + bX$

இங்கு, $Y = \log_{10}v$

$a = \dfrac{1}{m}\log_{10}k$

$b = -\dfrac{1}{m},$

$x = \log_{10}p$

இச் சமன்பாடு $Y = a + bX$ ஐப் பொருத்திப் பயன்படுத்தப் படும் இயல்நிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma Y = na + b\Sigma X \qquad \ldots(1)$$

அல்லது $\Sigma log_{10}v = 6 \times \frac{1}{m} log_{10}k - \frac{1}{m} log_{10}p$

$$\Sigma XY = a\Sigma X + b\Sigma X^2$$

அல்லது $(\Sigma\ log_{10}v)\ (log_{10}p)$

$$= \frac{1}{m} log_{10}k\ (\Sigma\ log_{10}p) - \frac{1}{m}\Sigma\ (log_{10}p)^2$$

(ii) ΣX, ΣY, ΣXY, ΣX^2.........ஆகியவற்றைக் கணக்கிடல்.

p (கி.கி./செ.மீ.^{2})	v (லிட்டர்களில்)	X $(=log_{10}p)$	Y $(=log_{10}v)$	XY	X^2
0·5	1620	$\bar{1}$·6990	3·2095	−0·9661	−·09061
1·0	1000	0·0000	3·0000	0·0000	·00000
1·5	750	0·1761	2·8751	0·5063	·03100
2·0	620	0·3010	2·7924	0·8405	·90610
2·5	520	0·3979	2·7160	0·1081	·15830
3·0	460	0·4771	2·6628	0·1271	·22760
மொத்தம்		ΣX = 1·0511	ΣY = 17·2558	ΣXY = 0·6159	ΣX^2 = ·59812

[குறிப்பு $\bar{1}$·6990 = −1+0·6990

$\bar{1}$·6990×3·2095 = −(0·3010) (3·2095)

= −0·9661]

பட்டியலில் கண்ட Σx; Σy; ΣXY; ΣX^2 மதிப்புகளை இயல்நிலை சமன்பாடுகளில் பிரதியிட்டால்:

$$17·2558 = 6a + 1·0511b$$
$$0·6159 = 1·0511a - 0·59812b$$

சமன்பாடுகளைத் தீர்வு கண்டால், a, bக்களின் மதிப்பு;

$$a = \frac{4·93}{1·7}$$

$$b = -\frac{1}{1·7}$$

ஆகவே, $m = -\frac{1}{b}$

$= -(-1{\cdot}7) = 1{\cdot}7$

$\log_{10}k = a \times m$

$= \frac{4{\cdot}93}{1{\cdot}7} \times 1{\cdot}7$

$= 4{\cdot}93$

$k = 4{\cdot}93$-ன் எதிர் மடக்கை

$= 85110$

ஆகையால், கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப்பட்ட வளைவின் வடிவம்:

$$pv^{1{\cdot}7} = 85110$$

மாதிரி 395

x, y மாறிகளின் தொடர்பு தோராயமாக $x^n y = C$ என இருப்பதாகக் கொண்டு n, C மதிப்புகளைக் கீழ்க் காணும் புள்ளி விவரங்கள் மூலம் கணக்கிடுக. பொருத்தப்பட்ட வளைவையும் காட்டு.

x	37·36	31·34	26·43	19·08	16·33	14·04
y	10·16	12·26	14·30	20·80	24·54	28·83

(இருபக்க மடக்கைத் தாளில், வரைபடம் மூலமும் காட்டு.)

(திருவனந்தபுரம் பல்கலைக் கழகம்—1941)

தீர்வு:

பொருத்தப்படவேண்டிய சமன்பாடு:

$$x^n y = C$$

இருபக்க மடக்கை எடுக்கவும்:

$$n \log_{10}x + \log_{10}y = \log_{10}C$$

அல்லது, $\log_{10}y = +\log_{10}C - n \log_{10}x$

அல்லது, $Y = A + BX$

இங்கு, $Y = \log_{10}y$

$A = \log_{10}C$

$B = -n$

$X = \log_{10}x$

A, *B* மதிப்புகளைக் கண்டறிய உதவும் இயல்நிலைச் சமன்பாடுகள் :

$$\Sigma Y = nA + B\Sigma X \qquad \ldots(1)$$

$$\Sigma XY = A\Sigma X + B\Sigma X^2 \qquad \ldots(2)$$

x	y	$X = \log_{10}x$	$Y\ (=\log_{10}y)$	XY	X^2
37·36	11·16	1·5724	1·0068	1·5831	2·4724
31·34	12·26	1·4961	1·0885	1·6285	2·2383
26·43	14·30	1·4221	1·1553	1·6430	2·0224
19·08	20·80	1·2806	1·3181	1·6880	1·6399
16·33	24·54	1·2130	1·3899	1·6859	1·4714
14·04	28·83	1·1473	1·4599	1.6749	1·3163
மொத்தம்		ΣX =8·1315	ΣY =7·4185	ΣXY =9·9034	ΣX^2 =11·1607

பட்டியலில் கண்ட மதிப்புகளை இயல்நிலைச் சமன்பாடுகளில் பிரதியிட்டால்:

$$7{\cdot}4185 = 6A + 8{\cdot}1315B$$

$$9{\cdot}9034 = 8{\cdot}1315 + 11{\cdot}1607B$$

இச் சமன்பாடுகளுக்குத் தீர்வு கண்ட பின்பு:

$$A = 2{\cdot}6882$$

$$A = -1{\cdot}0712$$

ஆகவே, *C*, *n* களின் மதிப்பு:

C = A-ன் எதிர் மடக்கை

= 2·6882-ன் எதிர் மடக்கை

= 487·7

$$n = -B$$

$$= 1{\cdot}072$$

ஆகவே, கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப் பட்ட வளைவு வடிவம்:

$$x^{1{\cdot}0712}\, y = 487{\cdot}7$$

மாதிரி 396

கீழ்க்காணும் புள்ளி விவரங்களுக்கு $y = ab^x$ என்ற கோட்டைப் பொருத்திக் காட்டுக.

x	2	3	4	5	6
y	144	172·8	207·4	248·8	298·5

(பி.எஸ்ஸி. — சென்னை — 1961)

தீர்வு:

பொருத்தப்படவேண்டிய வளைவு:

$$y = ab^x$$

இரு பக்கத்திலும் மடக்கை எடுக்கவும்:

$$\log_{10} y = \log_{10} a + x \log_{10} b$$

அல்லது, $Y = A+BX$

இங்கு, $Y = \log_{10} y$

$A = \log_{10} a$

$B = \log_{10} b$

$X = x$

A, B-க்களின் மதிப்பைக் கண்டறியப் பயன்படும் இயல்நிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma Y = nA + B\Sigma X \quad \ldots(1)$$

$$\Sigma XY = A\Sigma X + B\Sigma X^2 \quad \ldots(2)$$

அல்லது, $\Sigma \log y = n \log a + \log b \Sigma x$

$\Sigma x \log y = \log a \Sigma x + \log b \Sigma x^2$

என்பனவாகும்.

Σx, $\Sigma \log y$, Σx^2, $\Sigma x \log y$ களைக் கணக்கிடல்:

x	x^2	y	$\log y$	$x \log y$
2	4	144	2·1584	4·3168
3	9	172·8	2·2375	6·7125
4	16	207·4	2·3168	9·2672
5	25	248·8	2·3959	11·9795
6	36	298·5	2·4749	14·1254
Σx =20	Σx^2 =90		$\Sigma \log y$ =11·5835	$\Sigma x \log y$ =47·1254

பட்டியலில் கண்ட மதிப்புகளை இயல்நிலைச் சமன்பாடுகளில் பிரதியிட்டால்:

$$11{\cdot}5835 = 5 \log a + 20 \log b$$

$$47{\cdot}1254 = 20 \log a + 90 \log b$$

இச் சமன்பாடுகளுக்குத் தீர்வுகண்ட பின்பு:

$$\log a = 2{\cdot}00014$$

$$\log b = 0{\cdot}07914$$

ஆகவே, $a = 2{\cdot}00054$-ன் எதிர் மடக்கை

$= 100$

$b = 0{\cdot}0791$-ன் எதிர் மடக்கை

$= 1{\cdot}2$ (தோராயமாக)

ஆகவே, கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பொருத்தப்பட்ட வளைகோட்டு வடிவம்

$$y = 100\,(1{\cdot}2)^x$$

மாதிரி 397

ஒரு நாட்டின் மக்கள் தொகை, 10 ஆண்டுகள் இடைவெளிகளாகக் கீழே தரப்பட்டுள்ளது:

ஆண்டு	1881	1891	1901	1911	1921	1931	1941
மக்கள் தொகை (மில்லியனில்)	3·9	5·3	7·3	9·6	12·9	17·1	23·2

$y = ab^x$ என்ற வடிவ வளைவைப் பொருத்தி, 1951-ஆம் ஆண்டு மக்கள் தொகையை மதிப்பிடுக.

(சென்னைப் பல்கலைக் கழகம்—1953)

தீர்வு:

பொருத்தப்படவேண்டிய வளைவு: $y = ab^x$

இங்கு, $u = \dfrac{x-1911}{10}$ ஆக இருக்கட்டும்.

எனவே, பொருத்தப்படவேண்டிய வளைவு:

(u-மாறியைப் பயன்படுத்தி)

$$y = ab^u$$

இரு பக்கமும் மடக்கை எடுக்கவும்:

$$\log_{10} y = \log_{10} a + u \log_{10} b$$

அல்லது, $Y = A + Bu$

$Y = \log_{10} y$

$A = \log_{10} a$

$B = \log_{10} b$

இங்கு, A, B மதிப்புகளைக் காணப் பயன்படுத்தப்படும் இயல்நிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma Y = nA + B\Sigma u \quad ...(1)$$

$$\Sigma uY = A\Sigma u + B\Sigma u^2 \quad ...(2)$$

அல்லது, $\Sigma \log y = n(\log_{10} a) + (\log_{10} b)(\Sigma u)$

$\Sigma u \log y = (\log_{10} a)(\Sigma u) + (\log_{10} b)(\Sigma u^2)$

ஆகவே, $a = A$-ன் எதிர் மடக்கை

$b = B$-ன் எதிர் மடக்கை

Σu, ΣY, ΣuY, Σu^2 ஆகியவைகளைக் கணக்கிடல் :

ஆண்டு x	மக்கள்தொகை (மில்லியனில்) y	u	$Y = (\log y)$	uY	u^2
1881	3·9	−3	0·5911	−1·7733	9
1891	5·3	−2	0·7243	−1·4486	4
1901	7·3	−1	0·8633	−0·8633	1
1911	9·6	0	0·9823	0	0
1921	12·9	1	1·1106	1·1106	1
1931	17·1	2	1·2330	2·4660	4
1941	23·2	3	1·3655	4·0965	9
மொத்தம்		$\Sigma u = 0$	$\Sigma Y = 6·8701$	$\Sigma uY = 3·5879$	$\Sigma u^2 = 28$

பட்டியலில் கண்ட மதிப்புகளை இயல்நிலைச் சமன்பாடுகளில் பிரதியிட்ட பின்பு:

$$6·8701 = 7A + (0 \times B)$$

$$3·5879 = (0 \times A) + 28B$$

தீர்வு கண்டால், $A = \frac{6 \cdot 8701}{7}$

$= 0 \cdot 9814$

$B = \frac{3 \cdot 5879}{28}$

$= 0 \cdot 1281$

ஆகவே, a = A-ன் எதிர் மடக்கை

= 0·9814-ன் எதிர் மடக்கை

= 9·581

b = B-ன் எதிர் மடக்கை

= 0·1281-ன் எதிர் மடக்கை

= 1·343

ஆகவே, பொருத்தப்பட்ட வளைகோட்டின் வடிவம்:

$$Y = (9 \cdot 581)(1 \cdot 343)^{u}$$

இங்கு, $u = \frac{x - 1911}{10}$

$x = 1951$ எனில், $u = \frac{1951 - 1911}{10}$

$= 4$

ஆகவே, $Y = 0 \cdot 1281u + 0 \cdot 9814$

$= (0 \cdot 1281 \times 4) + 0 \cdot 9814$

$= 1 \cdot 4938$

அல்லது, $\log y = 1 \cdot 4938$

ஆகவே, y = 1·4938-ன் எதிர் மடக்கை

= **31·18**

மாதிரி 398

கொடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கு:

ஆண்டு	1881	1891	1901	1911	1921	1931	1941	1951
மக்கள் தொகை (மில்லியனில்) y	3·9	5·3	7·3	9·6	12·9	17·1	23·2	30·5

$y = ab^x$ என்ற வளைவைப் பொருத்தி 1961-ஆம் ஆண்டின் மக்கள் தொகையை மதிப்பிடுக.

(எம்.ஏ.—டெல்லி—1957)

தீர்வு:

Σu, Σy........களைக் கணக்கிடல்:

u	y	$\log y$	$u \log y$	u^2
−7	3·9	0 5911	−4·1317	49
−5	5 3	0·7243	−3·6215	25
−3	7·3	0·8633	−2·5899	9
−1	9·6	0·9823	−0·9823	1
1	12 9	1 1106	1·1106	1
3	17·1	1·2330	3·6990	9
5	23·2	1·3655	6·8275	25
7	30·5	1·4843	10·3901	49
Σu = 0		$\Sigma \log y$ = 8 3544	$\Sigma u \log y$ = 10·6858	Σu^2 = 168

$$y = ab^u$$
$$\Sigma \log y = nA + B\Sigma u$$
$$\Sigma u \log y = A\Sigma u + B\Sigma u^2$$

பட்டியலில் கண்ட மதிப்புகளைப் பிரதியிட்ட பின்பு:

$$8{\cdot}3544 = 8A$$
$$\therefore A = 1{\cdot}0443$$
$$10{\cdot}6858 = 168B$$
$$\therefore B = 0{\cdot}636$$

ஆகவே, a = A-ன் எதிர் மடக்கை

= 1·0443-ன் எதிர் மடக்கை

= **11·08**

b = B-ன் எதிர் மடக்கை

= 1·158

ஆகவே, பொருத்தப்பட்ட வளைகோடு:

$$y = (11{\cdot}08)\,(1{\cdot}158)^u$$

இங்கு, $u = \dfrac{x - 1916}{5}$

$x = 1961$ என்றால், $u = \dfrac{1961-1916}{5}$

$= 9$

ஆகவே, $y = (11{\cdot}08)\,(1{\cdot}158)^9$

$\log y = \log 11{\cdot}08 + 9 \log 1{\cdot}158$

$= 1{\cdot}0443 + 9\,(0{\cdot}0636)$

$= 1{\cdot}6167$

$\therefore\; y = 1{\cdot}6167$-ன் எதிர் மடக்கை

$= \mathbf{41{\cdot}37}$

ஆகையால் 1961ஆம் ஆண்டின் மக்கள் தொகை மதிப்பு

$= \mathbf{41{\cdot}37}$ மில்லியன்

மாதிரி 399

கீழ்க் காணும் பட்டியலில் 1916—1930 ஆண்டுகளில் அமெரிக்க ஐக்கிய நாட்டில் உற்பத்தியான பிரயாண வண்டிகளின் எண்ணிக்கையினைத் தருகிறது. $y = ar^x$ என்ற வடிவ வளைவினைப் பொருத்திக் காட்டுக.

ஆண்டு	எண்ணிக்கை (மில்லியனில்)	ஆண்டு	எண்ணிக்கை (மில்லியனில்)
1916	1·5	1924	3·7
1917	1·9	1925	4·4
1918	1·2	1926	4·5
1919	1·9	1927	3·6
1920	2·2	1928	4·6
1921	1·7	1929	5·6
1922	2·6	1930	3·5
1923	4·5		

(சென்னைப் பல்கலைக் கழகம்)

தீர்வு.

பொருத்தப்படவேண்டிய வளைவு $y = ar^x$

இங்கு, $X = x^{10} - 1923^{10}$ என இருக்கட்டும். பின்பு

$y = ar^X$

இரு பக்கமும் மடக்கை எடுக்கவும்.

$$\log_{10} y = \log_{10} a + X \log_{10} r$$

அல்லது, $Y = A + BX$

இங்கு, $Y = \log_{10} y$

$A = \log_{10} a$

$B = \log_{10} r$

$X = x - 1923$

இங்கு, A, B மதிப்புகளைக் காணப் பயன்படுத்தப்படும் இயல்நிலைச் சமன்பாடுகள்:

$$\Sigma Y = nA + B\Sigma X \quad \ldots(1)$$

$$\Sigma XY = A\Sigma X + B\Sigma X^2 \quad \ldots(2)$$

ΣX, ΣY, ΣXY........ ஆகியவைகளைக் கணக்கிடல்:

ஆண்டு x	எண்ணிக்கை y	X	Y (= log y)	XY	X^2
1916	1·6	−7	0·2041	−1·4287	49
1917	1·9	−6	0·2788	−1·6728	36
1918	1·2	−5	0·0792	−0·3960	25
1919	1·9	−4	0·2788	−1·1152	16
1920	2·2	−3	0·3424	−1·0272	9
1921	1·7	−2	0·2304	−0·4608	4
1922	2·6	−1	0·4150	−0·4150	1
1923	4·5	0	0·6532	0·0000	0
1924	3·7	1	0·5682	0·5682	1
1925	4·4	2	0·6435	1·2870	4
1926	4·5	3	0·6532	1·9596	9
1927	3·6	4	0·5528	2·2252	16
1928	4·6	5	0·6628	3·1140	25
1929	5·6	6	0·7482	4·4892	36
1930	3·5	7	0·5441	3·8087	49
மொத்தம்	$n = 15$	0	6·8582	10·9392	280

பட்டியலில் கண்டறிந்த மதிப்புகளை இயல்நிலைச் சமன்பாட்டில் பிரதியிட்ட பின்பு:

$$6{\cdot}8582 = 15A + (0 \times B)$$

$$10{\cdot}9362 = (0 \times A) + 280B$$

மேற்கண்ட சமன்பாடுகளைத் தீர்த்த பின்பு:

$$15A = 6{\cdot}8582$$

$$A = \frac{6{\cdot}8582}{15} = \mathbf{0{\cdot}4572}$$

$$280B = 10{\cdot}9362$$

$$\therefore\ B = \frac{10{\cdot}9362}{280}$$

$$= \mathbf{0{\cdot}039}$$

ஆகவே, a = A-ன் எதிர் மடக்கை

= 0·4572-ன் எதிர் மடக்கை

= 2·864

r = B-ன் எதிர் மடக்கை

= 0·039-ன் எதிர் மடக்கை

= **0·2455**

ஆகவே, பொருத்தப்பட்ட வளைகோட்டின் வடிவம்:

$$y = (2{\cdot}864)\,(0{\cdot}2455)^x$$

7. குறியீட்டெண்கள்

(Index Numbers)

ஒரு குறிப்பிட்ட நாளின் அல்லது குறிப்பிட்ட இடைவெளியின் இயற்காட்சியினை (Phenomenon), அதே இயற்காட்சி யிரொரு முந்திய நாளின் அல்லது இடைவெளியில் இருந்த நிலையோடு ஒப்பிட்டு, அளந்து கூறுதலையே குறியீட்டெண்கள் (Index Numbers) எனக் கூறுகிறோம்.

நாற்றுக்கு எப்பொழுதும் சமமாக இருக்கும்படியுள்ள அடிப்படை ஆண்டின் குறியீட்டுடன் ஒப்பிட்டு நடப்பு ஆண்டின் குறியீட்டைச் சதவீதத்தில் பெரும்பாலும் எழுதும் முறைக்கு குறியீட்டெண்கள் கணக்கிடும் முறை என்கிறோம்.

குறியீட்டெண்கள் கணக்கிடல்

I. **சாதாரண முறை**

$$\text{நிகழ்வாண்டுக் குறியீட்டெண்} = \frac{\text{நிகழ்வாண்டு விலை}}{\text{அடிப்படை ஆண்டு விலை}} \times 100$$

$$= \frac{p_1}{p_0} \times 100$$

II. **நிலையான அடிப்படை ஆண்டு, சங்கிலித்தொடர் அடிப்படை ஆண்டு ஆகிய முறைகளில் குறியீட்டெண்கள் கணக்கிடல்:**

மாதிரிகள்..............களைக் கவனிக்க.

III. **சார்பிகளின் சாதாரண சராசரி முறை:**

$$\text{நிகழ்வாண்டுக் குறியீட்டெண் } (p_{01}) = \frac{\Sigma\left(\frac{p_1}{p_0} \times 100\right)}{n}$$

IV. **நிறையிட்ட மொத்தக் குறியீட்டெண்:**

(1) லாஸ்ச்பேயரின் குறியீட்டெண்:

$$p_{01} = \frac{\Sigma\, p_1 q_0}{\Sigma\, p_0 q_0} \times 100$$

(இங்கு அடிப்படை ஆண்டு நுகர்வு அளவை நிறையாகக் கொண்டு, குறியீட்டெண் கணக்கிடப்பட்டுள்ளது)

(2) பாஷ்செயின் குறியீட்டெண்:

$$P_{01} = \frac{\Sigma\, p_1 q_1}{\Sigma\, p_0 q_1} \times 100$$

(இங்கு நிகழ்வாண்டு நுகர்வு அளவை நிறையாகக் கொண்டு குறியீட்டெண் கணக்கிடப்பட்டுள்ளது.

(3) மார்சல்—எட்ச்வொர்த் ஆகியோரின் குறியீட்டெண்.

$$P_{01} = \frac{\Sigma\, p_1 (q_0+q_1)}{\Sigma\, p_0 (q_0+q_1)} \times 100$$

இங்கு அடிப்படை, நிகழ்வு ஆண்டுகளின் கூடுதல் நுகர்வு அளவுகள் சராசரியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

(4) பிஷ்ஷரது விழுமிய குறியீட்டெண்:

$$P_{01} = \sqrt{\frac{\Sigma\, p_1 q_0}{\Sigma\, p_0 q_0} \times \frac{\Sigma\, p_1 q_1}{\Sigma\, p_0 q_1}} \times 100$$

இங்கு, அடிப்படை, நிகழ்வு ஆண்டுகளின் நுகர்வு அளவுகள் இரண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது காணலாம்.

இச் சூத்திரத்தை எதிர்மாற்று எடைச் சூத்திரம் என்றும் கூறலாம்.

(5) டிரோபிட்ச்—பவ்லி ஆகியோரின் குறியீட்டெண்:

$$P_{01} = \left\{\left(\frac{\Sigma\, p_1 q_0}{\Sigma\, p_0 q_0} \times \frac{\Sigma\, p_1 q_1}{\Sigma\, p_0 q_1}\right) \div 2\right\} \times 100$$

இங்கும் அடிப்படை, நிகழ்வு ஆண்டுகளின் நுகர்வு அளவுகள் இரண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது காணலாம்.

V. **வாழ்க்கை அடக்கச் செலவு குறியீட்டெண் (Cost of Living Index Number):**

(a) மொத்தச் செலவு முறை:

$$\text{குறியீட்டெண்} = \frac{\Sigma\, p_1 q_0}{\Sigma\, p_0 q_0} \times 100$$

(b) குடும்ப வரவு—செலவு முறை அல்லது சார்புகளின் நிறையிட்ட சராசரி முறை:

$$\text{குறியீட்டெண்} = \frac{\Sigma\, IV}{\Sigma\, V} \text{ அல்லது } \frac{\Sigma\, IW}{\Sigma\, W}$$

I = சார்புகள் (Price Relatives)

V அல்லது W = மதிப்பு அல்லது நிறை

VI **பேராசிரியர் இர்விங் பிஷ்ஷரின் விழுமிய சூத்திரம்:**

நிகழ்வாண்டின் குறியீட்டெண்

$$= \sqrt{\frac{\Sigma p_1 q_0}{\Sigma p_0 q_0} \times \frac{\Sigma p_1 q_1}{\Sigma p_0 q_1}} \times 100$$

(1) பொருள் எதிர் மாற்றுச் சோதனை (Commodity Reversal Test):

'பொருளை எப்படி எடுத்து வரிசைப்படுத்தினாலும் அதனால் குறியீட்டெண்கள் பாதிக்கப் படாமலிருத்தல் வேண்டும்'

எல்லாக் குறியீட்டெண்களும் இச் சோதனையை நிறைவு செய்கின்றன.

(2) கால எதிர் மாற்றுச் சோதனை (Time Reversal Test):

$$P_{01} \times P_{10} = 1$$

இங்கு, $P_{01} = \sqrt{\frac{\Sigma p_1 q_0}{\Sigma p_0 q_0} \times \frac{\Sigma p_1 q_1}{\Sigma p_0 q_1}}$,

$$P_{10} = \sqrt{\frac{\Sigma p_0 q_0}{\Sigma p_1 q_0} \times \frac{\Sigma p_0 q_1}{\Sigma p_1 q_1}}$$

(3) காரணி எதிர்மாற்றுச் சோதனை (Factor Reversal Test):

$$P_{01} \times Q_{01} = \frac{\Sigma p_1 q_1}{\Sigma p_0 q_0}$$

இங்கு, $P_{01} = \sqrt{\frac{\Sigma p_1 q_0}{\Sigma p_0 q_0} \times \frac{\Sigma p_1 q_1}{\Sigma p_0 q_1}}$

$$Q_{01} = \sqrt{\frac{\Sigma p_0 q_1}{\Sigma p_0 q_0} \times \frac{\Sigma p_1 q_1}{\Sigma p_1 q_0}}$$

VII. **அடிப்படை மாற்றல்:**

புதிய குறியீட்டெண்

$$= \frac{\text{நிகழ்வாண்டின் பழைய குறியீட்டெண்}}{\text{புதிய அடிப்படையாண்டின் பழைய குறியீட்டெண்}} \times 100$$

VIII. குறியீட்டெண்களைப் பிணைத்தல் (Splicing of Index Numbers):

பிணைத்த குறியீட்டெண்

$$= \frac{\text{நிகழ்வாண்டுக் குறியீட்டெண்} \times \text{புதிய அடிப்படை ஆண்டின் பழைய குறியீட்டெண்}}{100}$$

IX. குறியீட்டெண்ணின் வீக்கத்தைக் குறைத்தல் (Deflating Index Numbers)·

உண்மை வருமானம்

$$= \frac{\text{பண வருமானம்}}{\text{வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்}} \times 100$$

மாதிரி 400

கீழே தரப்பட்டுள்ள சணலின் ஆண்டுச் சராசரி மூட்டை விற்பனை விலைகளுக்கு 1914 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு, ஒவ்வோர் ஆண்டிற்கும் குறியீட்டெண்களைக் கணக்கிடவும்.

ஆண்டு	ரூபாய்கள்	ஆண்டு	ரூபாய்கள்
1914	78	1923	78
1915	54	1924	76
1916	67	1925	112
1917	56	1926	99
1918	72	1927	76
1919	102	1928	75
1920	98	1929	71
1921	94	1930	50
1922	88		

(பி.காம்.—கல்கத்தா—1934)

தீர்வு:

$$\text{குறியீட்டெண்} = \frac{p_1}{p_0} \times 100$$

இங்கு p_1 = நிகழ்வாண்டு விலை

p_0 = அடிப்படையாண்டு விலை

சணல் விலைகளின் குறியீட்டெண்கள்

ஆண்டு	விலை (ரூபாய்)	குறியீட்டெண் $\left(\frac{p_1}{p_0} \times 100\right)$
1914	78	= 100
1915	54	$\frac{54}{78} \times 100 = 69{\cdot}2$
1916	67	$\frac{67}{78} \times 100 = 85{\cdot}9$
1917	56	$\frac{56}{78} \times 100 = 71{\cdot}8$
1918	72	$\frac{72}{78} \times 100 = 92{\cdot}3$
1919	102	$\frac{102}{78} \times 100 = 130{\cdot}8$
1920	98	$\frac{98}{78} \times 100 = 125{\cdot}6$
1921	94	$\frac{94}{78} \times 100 = 120{\cdot}5$
1922	88	$\frac{88}{78} \times 100 = 112{\cdot}8$
1923	78	$\frac{78}{78} \times 100 = 100$
1924	76	$\frac{76}{78} \times 100 = 97{\cdot}4$
1925	112	$\frac{112}{78} \times 100 = 143{\cdot}6$
1926	99	$\frac{99}{78} \times 100 = 126{\cdot}9$
1927	76	$\frac{76}{78} \times 100 = 97{\cdot}4$

ஆண்டு	விலை (ரூபாய்)	குறியீட்டெண் $\left(\frac{p_1}{p_0} \times 100\right)$
1928	75	$\frac{75}{78} \times 100 = 96 \cdot 1$
1929	71	$\frac{71}{78} \times 100 = 91$
1930	50	$\frac{50}{78} \times 100 = 64 \cdot 1$

மாதிரி 401

மாதிரி 1-ல் கொடுக்கப்பட்ட சணலின் ஆண்டுச் சராசரி முழு விற்பனை விலைகளுக்கு, ஒவ்வோர் ஆண்டிற்கும் சங்கிலித் தொடர் அடிப்படை ஆண்டு முறையில் சாதாரணக் குறியீட்டெண்ணைக் கணக்கிடுக.

தீர்வு:

ஆண்டு	விலை (ரூபாய்)	சங்கிலித்தொடர் குறியீட்டெண் $\left(\frac{p_1}{p_0} \times 100\right)$
1914	78	$= 100$
1915	54	$\frac{54}{78} \times 100 =$
1916	67	$\frac{67}{54} \times 100 =$
1917	56	$\frac{56}{67} \times 100 =$
1918	72	$\frac{72}{56} \times 100 =$
1919	102	$\frac{102}{72} \times 100 =$

ஆண்டு	விலை (ரூபாய்)	சங்கிலித்தொடர் குறியீட்டெண் $\left(\frac{p_1}{p_0} \times 100\right)$
1920	98	$\frac{98}{102} \times 100 =$
1921	94	$\frac{94}{78} \times 100 =$
1922	88	$\frac{88}{94} \times 100 =$
1923	78	$\frac{78}{88} \times 100 =$
1924	76	$\frac{76}{78} \times 100 =$
1925	112	$\frac{112}{76} \times 100 =$
1926	99	$\frac{99}{112} \times 100 =$
1927	76	$\frac{76}{99} \times 100 =$
1928	75	$\frac{75}{76} \times 100 =$
1929	71	$\frac{71}{75} \times 100 =$
1930	50	$\frac{50}{71} \times 100 =$

சங்கிலித்தொடர் அடிப்படை ஆண்டு முறைக் குறியீட்டெண் $= \frac{p_1}{p_0} \times 100$

இங்கு, p_1 = நிகழ்வாண்டு விலை

p_0 = நிகழ்வாண்டிற்கு முந்தைய ஆண்டு விலை

மாதிரி 402

கீழ்க் காண்பவைகள் விலைகளின் குறியீட்டெண்களாகும். (அடிப்படை ஆண்டு 1939 = 100) அடிப்படை ஆண்டை 1939-லிருந்து 1946-க்கு மாற்றி புதிய குறியீட்டெண்ணைக் கணக்கிடவும்.

ஆண்டு	1939	1940	1941	1942	1943	1944	1945	1946
குறியீட்டெண்கள்	100	110	120	200	320	400	410	400
ஆண்டு	1947	1948	1949	1950	1951	1952	1953	1954
குறியீட்டெண்கள்	380	370	350	360	348	340	320	300

(எல்.ஃகான்சு—ப. 263)

தீர்வு:

அடிப்படை ஆண்டை 1939-லிருந்து 1946-க்கு மாற்றிய பின்பு புதிய குறியீட்டெண்கள் (அடிப்படை ஆண்டு 1946 = 100)

ஆண்டு	(குறியீட்டெண்கள்) (அடிப்படை ஆண்டு = 1939)	புதிய குறியீட்டெண்கள் (அடிப்படை ஆண்டு = 1946)
1939	100	$100 \times \frac{100}{400} = 25$
1940	110	$101 \times \frac{100}{400} = 27{\cdot}5$
1941	120	$102 \times \frac{100}{400} = 30$

ஆண்டு	(குறியீட்டெண்கள்) (அடிப்படை ஆண்டு = 1939)	புதிய குறியீட்டெண்கள் (அடிப்படை ஆண்டு = 1946)
1942	200	$200 \times \frac{100}{400} = 50$
1943	320	$320 \times \frac{100}{400} = 80$
1944	410	$400 \times \frac{100}{400} = 100$
1945	410	$400 \times \frac{100}{400} = 102{\cdot}5$
1946	400	$400 \times \frac{100}{400} = 100$
1947	380	$380 \times \frac{100}{400} = 95$
1948	370	$370 \times \frac{100}{400} = 92{\cdot}5$
1949	350	$350 \times \frac{100}{400} = 87{\cdot}5$
1950	360	$360 \times \frac{100}{400} = 90$
1951	348	$348 \times \frac{100}{400} = 87$
1952	340	$340 \times \frac{100}{400} = 85$
1953	320	$320 \times \frac{100}{400} = 80$
1954	300	$300 \times \frac{100}{400} = 75$

மாதிரி 403

(a) கீழே தரப்பட்டுள்ள சங்கிலித்தொடர் அடிப்படை ஆண்டு முறைக் குறியீட்டெண்களுக்கு, நிலையான அடிப்படை ஆண்டுக் குறியீட்டெண்களைக் கணக்கிடவும்.

ஆண்டு	1935	1936	1937	1938	1939	1940
நிலையான அடிப்படை ஆண்டுக் குறியீட்டெண் (1935 = 100)	94	98	102	95	98	100

(b) கீழே தரப்பட்டுள்ள சங்கிலித்தொடர் அடிப்படை ஆண்டு முறைக் குறியீட்டெண்களுக்கு, நிலையான அடிப்படை ஆண்டுக் குறியீட்டெண்களைக் கணக்கிடவும்.

ஆண்டு	1935	1936	1937	1938	1939	1940
சங்கிலித்தொடர் அடிப்படை ஆண்டுக் குறியீட்டெண்கள்	105	75	71	105	95	90

(பி.காம்.—ஆக்ரா—1943)

தீர்வு:

(a) 1935ஆம் ஆண்டு அடிப்படை ஆண்டாகும் = 100. நிலையான அடிப்படை ஆண்டு முறையில் கணக்கிடப்பட்ட குறியீட்டெண்களை, சங்கிலித் தொடர், அடிப்படை ஆண்டு முறைக் குறியீட்டெண்களாக மாற்றும் வழிமுறை கீழே தரப்பட்டுள்ளது:

ஆண்டு	நிலையான அடிப்படைக் குறியீட்டெண்	சங்கிலித்தொடர் அடிப்படைக் குறியீட்டெண்ணாக மாற்றல்	சங்கிலித்தொடர் அடிப்படைக் குறியீட்டெண்
1935	94	———	= 100·0
1936	98	$\frac{98}{94} \times 100$	= 104·3

ஆண்டு	நிலையான அடிப்படை குறியீட்டெண்	சங்கிலித்தொடர் அடிப்படைக் குறியீட்டெண்ணாக மாற்றல்	சங்கிலித்தொடர் அடிப்படைக் குறியீட்டெண்
1937	102	$\frac{102}{98} \times 100$	= 104·1
1938	95	$\frac{95}{102} \times 100$	= 93·1
1939	98	$\frac{98}{95} \times 100$	= 103·2
1940	100	$\frac{100}{98} \times 100$	= 102·0

(b) 1935 = 100 என்பதை அடிப்படை ஆண்டாகக் கொண்டு, நிலையான அடிப்படை ஆண்டுக் குறியீட்டெண்கள் கணக்கிடல்:

ஆண்டு	சங்கிலித்தொடர் அடிப்படைக் குறியீட்டெண்	சங்கிலித்தொடர் அடிப்படை ஆண்டுக் குறியீட்டெண்களை (1935 = 100) எனும் நிலையான அடிப்படைக் குறியீட்டெண்ணாக மாற்றல்	நிலையான அடிப்படை ஆண்டுக் குறியீட்டெண்
1935	105	——	= 100
1936	75	$\frac{105}{100} \times 75$	= 105
1937	71	$\frac{105}{100} \times \frac{75}{100} \times 71$	= 56
1938	105	$\frac{105}{100} \times \frac{75}{100} \times \frac{71}{100} \times 105$	= 59
1939	95	$\frac{105}{100} \times \frac{75}{100} \times \frac{71}{100} \times \frac{105}{100} \times 95$	= 56
1940	90	$\frac{105}{100} \times \frac{75}{100} \times \frac{71}{100} \times \frac{105}{100} \times \frac{95}{100} \times 90$	= 51

மாதிரி 404

(1) 1942 ஆம் ஆண்டின் விலையை அடிப்படை ஆண்டு விலையாகக் கொண்டு,

(2) சங்கிலித் தொடர் அடிப்படையாகக் கொண்டு குறியீட்டெண் கணக்கிடல்

ஆகிய முறைகளில் கீழ்க் காணும் குறியீட்டெண்களுக்குப் புதிய குறியீட்டெண்ணைக் காண்க

ஆண்டுகள்	1939	1940	1941	1942	1943	1944
குறியீட்டெண்கள்	100	110	175	250	300	400

(எம்.காம் – 1956)

தீர்வு:

கொடுக்கப்பட்ட புதிய குறியீட்டெண்கள் கணக்கிடல்:

ஆண்டு	கொடுக்கப்பட்ட குறியீட்டெண்கள்	1942 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு கணக்கிடப்பட்ட புதிய குறியீட்டெண்கள்	சங்கிலித்தொடர் அடிப்படையின் குறியீட்டெண்கள்
1939	100	$\frac{100 \times 100}{250} = 40$	100
1940	110	$\frac{100 \times 110}{250} = 40$	$\frac{110}{100} \times 100 = 110$
1941	175	$\frac{100 \times 175}{250} = 70$	$\frac{175}{110} \times 100 = 159$
1942	250	$\frac{100 \times 250}{250} = 100$	$\frac{250}{175} \times 100 = 143$
1943	300	$\frac{100 \times 300}{250} = 120$	$\frac{300}{250} \times 100 = 120$
1944	400	$\frac{100 \times 400}{250} = 160$	$\frac{400}{300} \times 100 = 133$

மாதிரி 405

கீழ்க்காணும் பட்டியலில் தரப்பட்டுள்ள இந்தியாவின் தொழில் உற்பத்திப் புள்ளி விவரங்களுக்குச் சங்கிலித்தொடர், அடிப்படை ஆண்டு முறையில் குறியீட்டெண்கள் கணக்கிட்டு, இந்தியாவின் தொழில் வளர்ச்சியின் ஏற்ற இறக்கத்தை ஒப்பிட்டுக் காட்டுக.

இந்தியாவின் தொழில் உற்பத்தியின் குறியீட்டெண்கள்:

ஆண்டு	குறியீட்டெண்	ஆண்டு	குறியீட்டெண்
1919—20	120	1926—27	149
1920—21	122	1927—28	156
1921—22	116	1928—29	137
1922—23	120	1929—30	162
1923—24	120	1930—31	149
1924—25	137	1931—32	160
1925—26	136	1932—33	160

(எம்.காம்.—லக்னோ—1943)

தீர்வு :

இந்தியாவின் தொழில் உற்பத்தியின் சங்கிலித்தொடர் குறியீட்டெண்கள் (1919-20 ஆம் ஆண்டின் தொழில் உற்பத்தியின் சங்கிலித்தொடர் குறியீட்டெண்ணை 100 என்று அடிப்படையாகக் கொண்டு) .

ஆண்டு	குறியீட்டெண்	சங்கிலித் தொடரின் குறியீட்டெண் $\left(\frac{p_1}{q_0} \times 100\right)$
1919-20	120	100
1920-21	122	$\frac{122}{120} \times 100 = 101{\cdot}66$
1921-22	116	$\frac{116}{122} \times 100 = 95.08$
1922-23	120	$\frac{120}{116} \times 100 = 103{\cdot}4$

ஆண்டு	குறியீட்டெண்	சங்கிலித் தொடரின் குறியீட்டெண் $\left(\frac{p_1}{p_0} \times 100\right)$
1923-24	120	$\frac{120}{120} \times 100 = 100$
1924-25	137	$\frac{137}{120} \times 100 = 114{\cdot}16$
1925-26	136	$\frac{136}{137} \times 100 = 99{\cdot}27$
1926-27	149	$\frac{149}{136} \times 100 = 109{\cdot}6$
1927-28	156	$\frac{156}{149} \times 100 = 104{\cdot}7$
1928-29	137	$\frac{137}{156} \times 100 = 87{\cdot}8$
1929-30	162	$\frac{162}{137} \times 100 = 118{\cdot}2$
1930-31	149	$\frac{149}{162} \times 100 = 91{\cdot}2$
1931-32	160	$\frac{160}{149} \times 100 = 107{\cdot}4$
1932-33	160	$\frac{160}{160} \times 100 = 100$

மாதிரி 406

மூன்று ஐந்தாண்டுச் சராசரிகள்:

(i) 1909-10-லிருந்து 1913-14 ஆண்டு வரை

(ii) 1914-15-லிருந்து 1918-19 ஆண்டு வரை

(iii) 1919-20-லிருந்து 1923-24 ஆண்டு வரை

ஆகியவற்றை அடிப்படை ஆண்டுகளாகக் கொண்டு, கீழ்க் காணும் புள்ளி விவரங்களுக்கு மூன்று குழுக்களாகக் குறியீட் டெண்கள் கணக்கிடுக.

ஆண்டு	இறக்குமதியின் மதிப்பு (கோடி ரூபாய்களில்)
சராசரி 1909-10-லிருந்து 1913-14 வரை	145·9
சராசரி 1914-15-லிருந்து 1918-19 வரை	147·8
சராசரி 1918-19-லிருந்து 1923-24 வரை	254·0
1924-25	246·6
1925-26	226·2
1926-27	231·2
1927-28	249·8
1928-29	253·3
1929-30	240·8
1930-31	164·8
1931-32	126·4
1932-33	132·6
1933-34	115·4

(பி.காம்.—ஆந்திரா—1943)

(பி.காம்.ஆனர்ஸ்—திருவனந்தபுரம்)

தீர்வு:

மூன்று தனித்தனி அடிப்படை ஆண்டுகளைக் கொண்டு குறியீட்டெண்கள் கணக்கிடல்:

ஆண்டுகள்	இறக்குமதியின் மதிப்பு (கோடி ரூபாயில்)	1909-10 — 1913-14 ஆண்டுகள் சராசரியை அடிப்படையாகக்கொண்ட குறியீட்டெண்கள்	1914-15 — 1918-19 ஆண்டுகள் சராசரியை அடிப்படையாகக்கொண்ட குறியீட்டெண்கள்	1919-20 — 1923-24 ஆண்டுகள் சராசரியை அடிப்படையாகக்கொண்ட குறியீட்டெண்கள்
1924-25	246·6	169·0	166 2	97 1
1925-26	226·2	155·6	153·1	86·1
1926-27	231·2	158·5	156·4	91·0
1927-28	249·8	171·2	169 0	99·7
1928-29	253 3	173·6	172·3	98 3
1929-30	240 8	164 4	162 2	94 8
1930-31	164·8	112·95	111 5	64·9
1931-32	126·4	86·6	85·5	49·8
1932-33	132·6	90 9	89·7	52·2
1933-34	115·4	79 1	79·0	45·4

குறிப்பு: $\text{குறியீட்டெண்} = \dfrac{\text{நிகழ்வாண்டு மதிப்பு}}{\text{அடிப்படை ஆண்டு மதிப்பு}} \times 100$

மாதிரி 407

கீழே கொடுக்கப்பட்டுள்ள நி. அ. ஆ. குறியீட்டெண்ணைச் சங்கிலித்தொடர் அடிப்படை ஆண்டுக் குறியீட்டெண்ணாக மாற்றி அமைக்கவும்.

ஆண்டு	1940	1941	1942	1943	1944
குறியீட்டெண்	267	275	280	290	320

(பி.காம்.—சென்னை—1962)

தீர்வு:

1904 ஆம் ஆண்டு அடிப்படை ஆண்டாகும் = 100. நிலையான அடிப்படை ஆண்டு முறையில் கணக்கிடப்பட்ட குறியீட்டெண்களை, சங்கிலித்தொடர் அடிப்படை ஆண்டு முறைக் குறியீட்டெண்களாக மாற்றும் வழிமுறை கீழே தரப் பட்டுள்ளது:

ஆண்டு	நிலையான அடிப்படை ஆண்டு குறியீட்டெண்	சங்கிலித்தொடர் அடிப்படை ஆண்டு குறியீட்டெண்ணாக மாற்றல்	சங்கிலித்தொடர் அடிப்படை ஆண்டு குறியீட்டெண்
1940	267	—	= 100·00
1941	275	$\frac{275}{267} \times 100$	= 102·99
1942	280	$\frac{280}{275} \times 100$	= 101·82
1943	290	$\frac{290}{280} \times 100$	= 103·57
1944	320	$\frac{320}{290} \times 100$	= 110·34

மாதிரி 408

கீழே கொடுக்கப்பட்டுள்ள சங்கிலித்தொடர் அடிப்படை ஆண்டு குறியீட்டெண்ணை, நிலையான அடிப்படை ஆண்டுக் குறியீட்டெண்ணாக மாற்றியமைக்கவும்.

ஆண்டு	1900	1901	1902	1903	1904
சங்கிலித்தொடர் அடிப்படை ஆண்டு குறியீட்டெண்	80	110	120	90	140

(பி.காம்.—சென்னை—1961)

தீர்வு:

1900 = 100 என்பதை அடிப்படை ஆண்டாகக் கொண்டு, நிலையான அடிப்படை ஆண்டுக் குறியீட்டெண்கள் கணக்கிடல்:

ஆண்டு	சங்கிலித்தொடர் அடிப்படைக் குறியீட்டெண்	சங்கிலித்தொடர் அடிப்படை ஆண்டுக் குறியீட்டெண்களை (1900 = 80) என்னும் நிலையான அடிப்படைச் குறியீட்டெண்ணாக மாற்றல்	நிலையான அடிப்படை ஆண்டுக் குறியீட்டெண்
1900	80	—	= 100·0
1901	110	$\frac{80}{100} \times 110$	= 88 0
1902	120	$\frac{80}{100} \times \frac{110}{100} \times 120$	= 105·6
1903	90	$\frac{80}{100} \times \frac{110}{100} \times \frac{120}{100} \times 90$	= 95·94
1904	140	$\frac{80}{100} \times \frac{110}{100} \times \frac{120}{100} \times \frac{90}{100} \times 140$	= 134·32

மாதிரி 409

1898 ஐயும், 1902 ஐயும் அடிப்படை ஆண்டுகளாகக் கொண்ட இரண்டு குறியீட்டு எண்களின் தொகுப்பு கீழே தரப் பட்டுள்ளது. 1907 ஆம் ஆண்டு வரை 1898ஆம் ஆண்டை அடிப் படை ஆண்டாகக் கொண்டு, மொத்த வரிசைக் குறியீட்டெண் களையும் கணக்கிடுக.

ஆண்டுகள்	குறியீட்டெண் (1898 = 100)	குறியீட்டெண் (1902 = 100)
1898	100·0	...
1899	112·8	...
1900	97·4	...
1901	100·0	...
1902	150·0	100·0
1903	...	126·9
1904	...	131·08
1905	...	143·6
1906	...	126·9
1907	...	96·2

தீர்வு:

முதல் வரிசை தேவைப்பட்ட (1898 = 100) ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டுள்ளது. இரண்டாம் வரிசையின் 1902 ஆம் ஆண்டை மாற்றி 1898 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு குறியீட்டெண் காணவேண்டும்.

ஆண்டுகள்	குறியீட்டெண்கள் (1948 = 100)
1898	100·0
1899	112·8
1900	97·4
1901	100·0
1902	150·0
1903	$\frac{126\cdot9 \times 150}{100} = 190\cdot35$
1904	$\frac{131\cdot8 \times 150}{100} = 196\cdot62$
1905	$\frac{143\cdot6 \times 150}{100} = 215\cdot40$
1906	$\frac{126\cdot9 \times 150}{100} = 190\cdot35$
1907	$\frac{96\cdot2 \times 150}{100} = 144\cdot30$

மாதிரி 410

கீழே தரப்பட்டுள்ள சங்கிலித்தொடர் அடிப்படை ஆண்டுக் குறியீட்டெண்களுக்கு,

(i) நேரடி முறை (ii) சுருக்க முறை

ஆகியவற்றில் நிகழ்வாண்டு அடிப்படை கண்டு குறியீட்டெண்களைக் கணக்கிடவும்.

ஆண்டு	1965	1966	1967	1968	1969	1970
சங்கிலித்தொடர் அடிப்படை ஆண்டு குறியீட்டெண்கள்	94·0	104·3	104·1	93·1	103·2	102·0

தீர்வு:

சங்கிலித்தொடர் அடிப்படை ஆண்டுக் குறியீட்டெண்ணிலிருந்து நிகழ்வாண்டு அடிப்படையாண்டுக் குறியீட்டெண் காணல்:

ஆண்டு	சங்கிலித் தொடர் அடிப்படை ஆண்டுக் குறியீட்டெண்கள்	(i) நேரடி முறை: மாற்றுதல்	(i) நேரடி முறை: நிகழ்வாண்டு அடிப்படையாண்டுக் குறியீட்டெண்கள்	(ii) சுருக்க முறை: மாற்றுதல்	(ii) சுருக்க முறை: நிகழ்வாண்டு அடிப்படையாண்டுக் குறியீட்டெண்கள்
1965	94·0	—	94·0	—	94·0
1966	104·3	$\frac{94}{100} \times 104{\cdot}3$	98·0	$\frac{94}{100} \times 104{\cdot}3$	98·0
1967	104·1	$\frac{94}{100} \times \frac{104{\cdot}3}{100} \times 104{\cdot}1$	102·0	$\frac{98}{100} \times 104{\cdot}1$	102·0
1968	93·1	$\frac{94}{100} \times \frac{104{\cdot}3}{100} \times \frac{104{\cdot}1}{100} \times 93{\cdot}1$	95·0	$\frac{102}{100} \times 93{\cdot}1$	95·0
1969	103·2	$\frac{94}{100} \times \frac{104{\cdot}3}{100} \times \frac{104{\cdot}1}{100} \times \frac{93{\cdot}1}{100} \times 103{\cdot}2$	98·0	$\frac{95}{100} \times 103{\cdot}2$	98·0
1970	102·0	$\frac{94}{100} \times \frac{104{\cdot}3}{100} \times \frac{104{\cdot}1}{100} \times \frac{93{\cdot}1}{100} \times \frac{103{\cdot}2}{100} \times 102$	100·0	$\frac{98}{100} \times 102$	100·0

மாதிரி 41

கீழ்க் காணும் புள்ளி விவரங்களுக்கு 1908—1909 ஆண்டுகளின் சராசரி விலையை அடிப்படை ஆண்டு விலையாகக்கொண்டு விலைக் குறியீட்டெண்களைக் கணக்கிடுக.

ஆண்டுகள்	விலைகள்	ஆண்டுகள்	விலைகள்
1900	78	1905	99
1901	88	1906	102
1902	76	1907	112
1903	78	1908	99
1904	94	1909	75

தீர்வு:

கொடுக்கப்பட்ட பத்து ஆண்டுகளின் விலைகளின் சராசரியைக் கணக்கிட்டு, அதை அடிப்படையாகக் கொண்டு குறியீட்டெண்கள் கணக்கிடவேண்டும்.

1900—1909 ஆகிய பத்து ஆண்டு **விலைகளின் கூடுதல்:**

$$78+88+76+78+94+99+102+112+99+75 = 901$$

ஆகவே, 1900—1909ஆம் **ஆண்டுகளில் விலைகள்**

$$\text{கூட்டுச் சராசரி} = \frac{901}{10} = 90{\cdot}1$$

குறியீட்டெண் கணக்கிடல்:

ஆண்டு	விலைகள்	வழிமுறை	குறியீட்டெண்கள்
1900	78	$\frac{78}{90{\cdot}1} \times 100 =$	85·2
1901	88	$\frac{88}{90{\cdot}1} \times 100 =$	97·7
1902	76	$\frac{76}{90{\cdot}1} \times 100 =$	84·3
1903	94	$\frac{78}{90{\cdot}1} \times 100 =$	85·2

ஆண்டு	விலைகள்	வழிமுறை	குறியீட்டெண்கள்
1904	94	$\frac{94}{90 \cdot 1} \times 100 =$	104·3
1905	99	$\frac{99}{90 \cdot 1} \times 100 =$	109·9
1906	102	$\frac{102}{90 \cdot 1} \times 100 =$	113·2
1907	112	$\frac{112}{90 \cdot 1} \times 100 =$	124·3
1908	99	$\frac{99}{90 \cdot 1} \times 100 =$	109·9
1909	75	$\frac{75}{90 \cdot 1} \times 100 =$	83·2

மாதிரி 412

1926-30 ஆண்டை நிலையான அடிப்படை ஆண்டாகக் கொண்டு 1930-31—1935-36 ஆண்டுகளின் ஏற்றுமதி அளவுகளின் குறியீட்டெண்கள், மதிப்புகளின் குறியீட்டெண்கள் ஆகியவற்றைக் கணக்கிட்டு, இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் சுத்தம் செய்யப்படாத பஞ்சின் ஏற்ற இறக்கங்களைக் காணவும்.

ஆண்டுகள்	சுத்தம் செய்யாப் பருத்தி (ஆயிரம் டன்களில்)	சுத்தம் செய்யாப் பருத்தியின் மதிப்பு (லட்ச ரூபாய்களில்)
1926-30 (சராசரி)	609	5941
1930-31	701	4633
1931-32	423	2345
1932-33	365	2037
1933-34	504	2753
1934-35	623	3495
1935-36	607	3377

(ஐ.சி.எஸ்.—1939)

தீர்வு :

அடிப்படை ஆண்டு 1926-30 = 100

ஆண்டுகள்	எடை (1000 டன்களில்)	சுத்தம் செய்யப்படாத பஞ்சு குறியீட்டெண்கள் $\left(\frac{p_1}{p_0} \times 100\right)$	மதிப்பு (லட்ச ரூபாய்களில்)	குறியீட்டெண்கள் $\left(\frac{p_1}{p_0} \times 100\right)$
1926—30 (சராசரி)	609	100	5941	100
1930—31	701	$\frac{701}{609} \times 100 = 115$ (தோராயமாக)	4633	$\frac{4633}{5941} \times 100 = 78$ (தோராயமாக)
1931—32	423	$\frac{423}{609} \times 100 = 69$,,	2345	$\frac{2345}{5941} \times 100 = 40$,,
1932—33	365	$\frac{365}{609} \times 100 = 60$,,	2037	$\frac{2037}{5941} \times 100 = 34$,,
1933—34	504	$\frac{504}{609} \times 100 = 83$,,	2753	$\frac{2753}{5941} \times 100 = 46$,,
1934—35	623	$\frac{623}{609} \times 100 = 102$,,	3495	$\frac{3495}{5941} \times 100 = 59$,,
1935—36	607	$\frac{607}{609} \times 100 = 100$,,	3377	$\frac{3377}{5941} \times 100 = 57$,,

மாதிரி 413

1936 ஆம் ஆண்டைவிட 1937 ஆம் ஆண்டின் மொத்த விற்பனை விலைச் சராசரி 15·1% அதிகமாக இருக்கிறது. இவ்விரு ஆண்டுகளின் குறியீட்டெண்கள் முறையே 94·4, 108·7 ஆகவும் இருக்கின்றன. (1930 = 100) ஒவ்வோர் ஆண்டையும் அதன் முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்டால் விலை ஏற்றம் முறைய 6·1, 1·0, 2·8 %களாக இருக்கின்றன. 1933 ஆம் ஆண்டின் விலை 1932ஆம் ஆண்டின் விலையாகவே மாற்றமின்றி இருக்கிறது; ஆனால் 1931ஆம் ஆண்டின் விலையை விட 2·5% குறைவாக இருக்கிறது. 1931ஆம் ஆண்டின் விலை 1930ஆம் ஆண்டின் விலையை விட 12·2% குறைவாக இருக்கிறது.

இப்புள்ளி விவரங்களிலிருந்து 1930–1937 வரையுள்ள எட்டு ஆண்டுகளின் தனித்தனி குறியீட்டெண்களை கணக்கிடவும்.

(எம். காம்.—ஆக்ரா—1964)

தீர்வு:

ஒவ்வோர் ஆண்டு விலைகளின் தனித்தனி குறியீட்டெண்களைக் கணக்கிடல்:

(அடிப்படை ஆண்டு = 1930)

1930ஆம் ஆண்டின் குறியீட்டெண் = **100**

1930ஆம் ஆண்டைவிட 1931ஆம் ஆண்டின் விலை 12·2% குறைவு

1931ஆம் ஆண்டின் குறியீட்டெண் = 100 – 12·2%

= **87·8**

1931ஆம் ஆண்டைவிட 1932ஆம் ஆண்டின் விலை 2·5% குறைவு.

$$\therefore \text{1932 ஆம் ஆண்டின் குறியீட்டெண்} = \frac{87·8 \times 97·5}{100}$$

= **85·6**

1933ஆம் ஆண்டின் விலை 1932ஆம் ஆண்டின் விலையைப்போல் மாற்றமின்றி உள்ளது.

எனவே, 1933ஆம் ஆண்டின் குறியீட்டெண் = **85·6**

1934ஆம் ஆண்டின் விலை அதன் முந்தைய ஆண்டு விலையைவிட 2·8% அதிகம்

$$\therefore \text{1934ஆம் ஆண்டின் குறியீட்டெண்} = \frac{85·6 \times 102·8}{100}$$

= **88·0**

1935ஆம் ஆண்டின் விலை அதன் முந்தைய ஆண்டு விலையைவிட 1% அதிகம்.

$\therefore$ 1935ஆம் ஆண்டின் குறியீட்டெண் $= \frac{88 \times 101}{100}$

$= \mathbf{89 \cdot 0}$

1936ஆம் ஆண்டின் விலை அதன் முந்தைய ஆண்டின் விலையை விட 6% அதிகமாக இருக்கிறது.

1936ஆம் ஆண்டின் குறியீட்டெண் $= \frac{89 \cdot 0 \times 106 \cdot 1}{100}$

$= \mathbf{94 \cdot 4}$

1937ஆம் ஆண்டின் விலை 1936ஆம் ஆண்டின் விலையைவிட 15·1% அதிகம்.

$\therefore$ 1937ஆம் ஆண்டின் குறியீட்டெண் $= \frac{94 \cdot 4 \times 115 \cdot 1}{100}$

$= \mathbf{108 \cdot 7}$

ஆகவே, கேட்கப்பட்ட எல்லா ஆண்டுகளின் குறியீட்டெண்களும் கணக்கிட்டுக் காட்டப் பட்டுள்ளன.

மாதிரி 414

கீழ்க் காணும் பட்டியல் சென்னை மாநிலத்தில் 1903-'04, 1914-'15 ஆண்டுகளில் நான்கு முக்கிய தானியங்களின் ஒரு கார்சின் எடையின் சில்லறை விற்பனை விலையை ரூபாயில் தருகிறது. 1903-'04 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக்கொண்டு நான்கு தானியங்களின் 1914-'15ஆம் நிகழ்வாண்டின் குறியீட்டெண்ணை

(i) கூட்டுச் சராசரி முறை

(ii) பெருக்குச் சராசரி முறை

(iii) இசைச் சராசரி முறை

(iv) சாதாரண மொத்தச் சராசரி முறை

ஆகியவற்றில் காண்.

ஆண்டு	ஒரு கார்சின் எடையின் விலை			
	நெல்	சோளம்	கம்பு	கேழ்வரகு
1903-'04	158	168	157	155
1914-'15	272	326	309	304

(சென்னைப் பல்கலைக் கழகம்—1934)

தீர்வு:

விலை சார்பிகள் $\frac{272}{158}, \frac{326}{168}, \frac{309}{157}, \frac{304}{155}$.

(i) சாதாரணக் கூட்டுச் சராசரி:

$$= \frac{\frac{272}{158} + \frac{326}{168} + \frac{309}{157} + \frac{304}{155}}{4} \times 100$$

$$= \mathbf{189 \cdot 8}$$

(ii) சாதாரணப் பெருக்குச் சராசரி முறை:

$$= 100 \times \sqrt[4]{\frac{272}{158} \times \frac{326}{168} \times \frac{309}{157} \times \frac{304}{155}}$$

$$= \mathbf{189 \cdot 5}$$

(iii) சாதாரண இசைச் சராசரி முறை:

$$= \frac{4}{\frac{158}{272} + \frac{168}{326} + \frac{157}{309} + \frac{155}{304}} \times 100$$

$$= \mathbf{189 \cdot 2}$$

(iv) சாதாரண மொத்தச் சராசரி முறை:

$$= \frac{272 + 326 + 307 + 304}{158 + 168 + 157 + 155} \times 100$$

$$= \mathbf{189 \cdot 8}$$

இங்கு,

சாதாரணக் கூட்டுச் சராசரிக் குறியீட்டெண் > பெருக்குச் சராசரிக் குறியீட்டெண்.

பெருக்குச் சராசரிக் குறியீட்டெண் > இசைச் சராசரிக் குறியீட்டெண் என்பதைக் கவனிக்கலாம்;

மாதிரி 415

கீழே தரப்பட்டுள்ள பட்டியலிலுள்ள நுகர் பொருள்களின் விலைப் புள்ளி விவரங்களிலிருந்து 1961ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு 1966ஆம் ஆண்டின் குறியீட்டெண்களை,

(i) சாதாரணக் கூட்டுச் சராசரி முறை

(ii) சாதாரண இடைநிலை முறை

(iii) சாதாரணப் பெருக்குச் சராசரி முறை

ஆகியவற்றில் கணக்கிடுக.

நுகர் பொருள்கள்	ஓர் அலகுப் பொருளின்: சராசரி விலை (ரூபாயில்) 1961	1962	1963	1964	1965	1966
கோதுமை	17·3	14·5	4·9	5·7	17·1	11·6
அரிசி	34·1	17·3	14·8	13·2	29·8	13·3
ஆடை	6·5	6·2	3·5	4·1	7·3	4·2
புகையிலை	7·0	6·5	3·5	3·6	8·0	4·2
கொப்பரைத் தேங்காய்	7·7	3·6	3·4	2·8	5·5	2·7
காய்கறிகள்	7·3	5·8	4·3	3·7	7·7	4·1

தீர்வு:

மொத்த விற்பனை விலைக் குறியீட்டெண் கணக்கிடல்:
(1961 = 100)

நுகர் பொருள்கள்	விலைச் சார்பிகள் $\left(=\frac{p_1}{p_0}\times 100\right)$ 1961	1962	1963	1964	1965	1966
கோதுமை	100	84	28	33	100	67
அரிசி	100	51	43	39	87	39
ஆடை	100	95	54	63	112	65
புகையிலை	100	93	50	51	114	60
தேங்காய்க் கொப்பரை	100	47	44	36	71	38
காய்கறிகள்	100	79	59	51	105	56
சார்பிகளின் கூடுதல்	600	449	278	273	589	325

நுகர் பொருள்கள்	விலைச் சார்பிகள் $\left(=\frac{p_1}{q_0}\times 100\right)$ 1961	1962	1963	1964	1965	1966
கூட்டுச் சராசரிக் குறியீட்டெண்கள்	100	75	46	45	98	54
பெருக்குச் சராசரிக் குறியீட்டெண்கள்	100	72	45	44	97	53
சாதாரண இடைநிலைக் குறியீட்டெண்கள்	100	72	47	45	102	58

மாதிரி 416

1950ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு, 1955, 1956, 1957 ஆம் ஆண்டுகளின் குறியீட்டெண்களை,

(i) கூட்டுச் சராசரி முறை
(ii) இடைநிலை முறை
(iii) பெருக்குச் சராசரி முறை

ஆகியவற்றில் காண்க.

நுகர் பொருள்கள்	ஓர் அலகின் விலை (ரூபாயில்) 1950	1955	1956	1957
A	7·5	15·0	10·0	12·0
B	5·0	6·0	8·0	6·5
C	6·0	9·0	4·0	5·0
D	4·0	4·0	6·0	8·0
E	8·5	7·5	8·0	10·0

தீர்வு :

சாதாரணக் குறியீட்டெண்கள் கணக்கிடல்:
(அடிப்படை ஆண்டு 1950 = 100)

நுகர் பொருள்கள்	சார்பிகள் $\left(= \frac{p_1}{p_0} \times 100\right)$ 1950	1955	1956	1957
A	100	200	133	160
B	100	120	160	130
C	100	150	67	83
D	100	100	150	200
E	100	88	94	118
சார்பிகளின் கூடுதல்	500	658	604	691
கூட்டுச் சராசரிக் குறியீட்டெண்கள்,	100	131·6	120·8	138·2
இடைநிலைக் குறியீட்டெண்கள்	100	120·0	133·0	130·0
சாதாரணப் பெருக்குச் சராசரிக் குறியீட்டெண்கள்	100	125·9	114·8	132·4

மாதிரி 417

நான்கு நுகர் பொருள்களின் விலைகளின் குறியீட்டெண்களின் வரிசை கீழே தரப்பட்டுள்ளது. சராசரியை அடிப்படையாகக்கொண்ட நான்கு பொருள்களையும் ஒன்றாக எடுத்து கணக்கிட்ட குறியீட்டெண்களும் தரப்பட்டுள்ளன. சங்கிலித்தொடர்

அடிப்படை ஆண்டு முறையில் புதிய குறியீட்டெண்களை ஏழு ஆண்டுகளுக்கும் கணக்கிடுக.

ஆண்டு	சர்க்கரை	பால்	காப்பி	டீ	மொத்தம்	சராசரி
1921	81	77	119	55	332	83·0
1922	82	54	128	82	326	81·5
1923	104	87	111	100	402	100·5
1924	93	75	154	96	418	104 5
1925	60	43	165	88	356	89·0
1926	60	44	159	89	352	88·0
1927	62	47	139	84	332	83 0

(ஜ.—அக்.—1939)

தீர்வு:

சங்கிலித்தொடர் அடிப்படை ஆண்டு குறியீட்டெண் கணக்கிடல்:

ஆண்டு	நுகர் பொருள்கள்				சங்கிலித் தொடர் சார்பிகளின் கூடுதல்	சங்கிலித் தொடர் சார்பிகளின் சராசரி (சங்கிலித் தொடர் அடிப்படை ஆண்டுக் குறியீட்டெண்கள்)
	சர்க்கரை	பால்	காப்பி	டீ		
1921	100	100	100	100	400·0	100·0
1922	101·2	70 1	107·6	149·1	428·0	107·0
1923	126 8	161·2	86·7	121·9	496·6	124·5
1924	89·4	86·3	138·7	96·0	410·4	102·6
1925	64·5	57·3	107·1	91·7	320·6	80·15
1926	100·0	102·3	96·4	101·1	399·8	99·95
1927	103·3	106·8	87·4	94·4	391·9	97·98

இங்கு,

$$\text{சார்பிகள்} = \frac{p_1}{p_0} \times 100$$

p_1 = நிகழ்வாண்டு விலை

p_0 = நிகழ்வாண்டின் முந்தைய ஆண்டின் விலை

மாதிரி 418

1929, 1930, 1931, 1932ஆம் ஆண்டுகளுக்கு, 1928ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு கீழ்க் காணும் புள்ளி விவரங்களுக்கு மொத்த விற்பனை விலைக் குறியீட்டெண்களைக் கணக்கிடவும்.

கூட்டுச் சராசரி விலை—ரூபாயில்—(மாண்டிற்கு)

நுகர் பொருள்கள்	1928	1929	1930	1931	1932
அரிசி	7·3	7·7	5·8	4·1	4·3
கோதுமை	7·7	5·5	3·6	2·7	3·4
ஆளி விதை	7·0	8·0	6·5	4·2	3·5
நெய்	6·5	7·3	6·2	4·2	3·5
பஞ்சு	34·1	29·8	17·3	13·3	14·8
புகையிலை	17 3	17·1	14·5	11·6	4·9

(எம்.எஸ்.டபிள்யூ.—லக்னோ)

தீர்வு :

நுகர் பொருள்கள்	சார்பிகள் (1928 = 100)				
	1928	1926	1930	1931	1932
அரிசி	100	105	79	56	59
கோதுமை	100	71	47	38	44
ஆளி விதை	100	114	93	60	50
நெய்	100	112	95	65	54
பஞ்சு	100	87	51	39	43
புகையிலை	100	100	84	67	28
சார்பிகளின் கூடுதல்	600	589	449	325	278
சார்பிகளின் சராசரி (சராசரிக் குறியீட்டெண்)	100	98	75	54	46
சார்பிகளின் இடைநிலை (இடைநிலைக் குறியீட்டெண்)	100	102	82	58	47
பெருக்குச் சராசரிக் குறியீட்டெண்	100	97	72	53	45

மாதிரி 418

1929, 1930, 1931, 1932ஆம் ஆண்டுகளுக்கு, 1928ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு கீழ்க் காணும் புள்ளி விவரங்களுக்கு மொத்த விற்பனை விலைக் குறியீட்டெண்களைக் கணக்கிடவும்.

கூட்டுச் சராசரி விலை—ரூபாயில்—(மாண்டிற்கு)

நுகர் பொருள்கள்	1928	1929	1930	1931	1932
அரிசி	7·3	7·7	5·8	4·1	4·3
கோதுமை	7·7	5·5	3·6	2·7	3·4
ஆளி விதை	7·0	8·0	6·5	4·2	3·5
நெய்	6·5	7·3	6·2	4·2	3·5
பஞ்சு	34·1	29·8	17·3	13·3	14·8
புகையிலை	17 3	17·1	14·5	11·6	4·9

(எம்.எஸ்.டபிள்யூ.—லக்னோ)

தீர்வு :

நுகர் பொருள்கள்	சார்பிகள் (1928 = 100)				
	1928	1926	1930	1931	1932
அரிசி	100	105	79	56	59
கோதுமை	100	71	47	38	44
ஆளி விதை	100	114	93	60	50
நெய்	100	112	95	65	54
பஞ்சு	100	87	51	39	43
புகையிலை	100	100	84	67	28
சார்பிகளின் கூடுதல்	600	589	449	325	278
சார்பிகளின் சராசரி (சராசரிக் குறியீட்டெண்)	100	98	75	54	46
சார்பிகளின் இடைநிலை (இடைநிலைக் குறியீட்டெண்)	100	102	82	58	47
பெருக்குச் சராசரிக் குறியீட்டெண்	100	97	72	53	45

மாதிரி 419

அ, ஆ, இ, ஈ, உ என்ற நுகர் பொருள்களின் 1935, 1936, 1937, 1938ஆம் ஆண்டுகளின் சராசரி மொத்த விற்பனை விலைகளைக் கீழ்க் காணும் பட்டியல் தருகிறது. 1935 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு, மற்றைய ஆண்டுகளின் குறியீட்டெண்களைக் கணக்கிடவும்.

ஆண்டு	நுகர் பொருள்களின் சராசரி மொத்த விற்பனை விலைகள் அ	ஆ	இ	ஈ	உ
1935	300	200	400	450	550
1936	320	220	440	500	600
1937	360	250	460	520	610
1938	400	300	500	550	650

தீர்வு:

நுகர் பொருள்கள்	1935ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்ட சார்பிகள் 1935	1936	1937	1938
அ	100	$\frac{320}{300} \times 100 = 106$	$\frac{360}{300} \times 100 = 120$	$\frac{400}{300} \times 100 = 133$
ஆ	100	110	125	150
இ	100	110	115	125
ஈ	100	111	116	122
உ	100	109	110	118
சார்பிகளின் கூடுதல்	500	546	586	648
குறியீட்டெண்கள் (சார்பிகளின் சராசரியாகக் கொள்கிறோம்)	100	109	117	129

மாதிரி 420

கீழே தரப்பட்டுள்ள 5 பொருள்களின் விலைப் பட்டியலுக்கு
(i) நிலையான அடிப்படை ஆண்டு முறை (1960 = 100)
(ii) சங்கிலித் தொடர் அடிப்படை ஆண்டு முறை ஆகியவற்றில் சாதாரணக் குறியீட்டு எண்களைக் கணக்கிடவும்.

நுகர் பொருள்கள்	நுகர் பொருள்களின் விலை விலை (1960) ரூபாயில்	விலை (1961) ரூபாயில்	விலை (1962) ரூபாயில்
அ	10	20	30
ஆ	11	22	33
இ	12	6	12
ஈ	13	6·5	13
உ	14	7·0	28

தீர்வு:

(i) நிலையான அடிப்படை ஆண்டு (1960 = 100) முறையில் சாதாரணக் குறியீட்டெண் கணக்கிடல்:

நுகர் பொருள்கள்	சார்பிகள் $\left(\frac{p_1}{p_0}\times 100\right)$ (1960 = 100) நிலையான அடிப்படை ஆண்டு 1960 = 100	1961	1962
அ	100	200	300
ஆ	100	200	300
இ	100	50	100
ஈ	100	50	100
உ	100	50	200
சார்பிகளின் கூடுதல்	500	550	1000
கூட்டுச் சராசரிக் குறியீட்டெண்	100	110	200
இடை நிலைக் குறியீட்டெண்	100	50	200
பெருக்குச் சராசரிக் குறியீட்டெண்	100	87	178·2

(b) சங்கிலித் தொடர் அடிப்படை ஆண்டு முறையில் குறியீட்டெண்கள் கணக்கிடல்:

நுகர் பொருள்கள்	சார்பிகள் $\left(\frac{p_1}{p_0} \times 100\right)$ சங்கிலித்தொடர் அடிப்படை ஆண்டு முறையில் 1960	1961	1962
அ	100	200	150
ஆ	100	200	150
இ	100	50	200
ஈ	100	50	200
உ	100	50	400
சங்கிலித்தொடர் அடிப்படை ஆண்டு சார்பிகளின் கூடுதல்	500	550	1100
கூட்டுச் சராசரிக் குறியீட்டெண்கள்	100	110	220
இடைநிலைக் குறியீட்டெண்கள்	100	50	200
பெருக்குச் சராசரிக் குறியீட்டெண்கள்	100	87	204·6

மாதிரி 421 நிறையிட்ட குறியீட்டெண்

கீழே தரப்பட்ட புள்ளி விவரங்களுக்கு 1951ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு 1952ஆம் ஆண்டு விலைகளின் குறியீட்டெண்ணைக் கணக்கிடுக:

நுகர் பொருள்கள்	எடை	விலை (அலகிற்கு) 1951	விலை (அலகிற்கு) 1952
A	40	16 — 00	20 — 00
B	25	40 — 00	60 — 00
C	5	0 — 50	0 — 50
D	20	5 — 12·5	6 — 25
E	10	2 — 00	1 — 50

(எம் எஸ்.டபிள்யூ.—லக்னோ)

தீர்வு:

நுகர் பொருள்கள்	விலைகள் (ஓர் அலகிற்கு) 1951 (அடிப்படை ஆண்டு) ரூ.பை.	1952 ரூ.பை.	விலை சார்பிகள் (1951 = 100) P	எடை W	பெருக்கல் P × W
A	16·00	20·00	125	40	5000
B	40·00	60·00	150	25	3750
C	0·50	0·50	100	5	500
D	5·12·5	6·25	122	20	2440
E	2·00	1·50	75	10	750
				$\Sigma W = 100$	$\Sigma PW = 12440$

1952ஆம் ஆண்டின் விலைகளின் நிறையிட்ட குறியீட்டெண் $= \dfrac{\Sigma PW}{\Sigma W}$

$$= \frac{12440}{100}$$

$$= 124{\cdot}40$$

மாதிரி 422

கீழே தரப்பட்டுள்ள மூன்று பிரிவுப் பொருள்களின் சராசரி விலைகளின் (ஓர் அலகிற்கு ரூபாய் விலை) பட்டியலுக்கு, நிறையிட்ட கூட்டுச் சராசரிக் குறியீட்டெண்ணைக் கணக்கிடுக.

பிரிவு	1939	1940	1941	1942
I	15	18	24	30
II	9	12	15	18
III	2	2	3	3

மேற்கண்ட மூன்று பிரிவுகளுக்கும் முறையே 4, 3, 2 என்று எடைகள் கொடுக்கவும்.

(பி.காம்.—லக்னோ)

தீர்வு :

நிலையான அடிப்படை ஆண்டு (1939 = 100)

பிரிவு	எடை	(1939 = 100)		1940		1941		1942	
		கு.யி. எண்	நிறையிட்ட சார்பிகள்	கு.யி. எண்	நிறையிட்ட சார்பிகள்	கு.யி. எண்	நிறையிட்ட சார்பிகள்	கு.யி. எண்	நிறையிட்ட சார்பிகள்
I	4	100	400	120	480	160	640	200	800
II	3	100	300	133·33	400	166·66	500	200	600
III	2	100	200	100	200	150	300	150	300
மொத்தம்	$\Sigma W = 9$		900		1080		1440		1700

1939 ஆம் ஆண்டின் நிறையிட்ட குறியீட்டெண் $= \dfrac{\Sigma IW}{\Sigma W}$

$= \dfrac{900}{9}$

$= \mathbf{100}$

1940 ஆம் ஆண்டின் நிறையிட்ட குறியீட்டெண் $= \dfrac{\Sigma IW}{\Sigma W}$

$= \dfrac{1080}{9}$

$= \mathbf{120}$

1941 ஆம் ஆண்டின் நிறையிட்ட குறியீட்டெண் $= \dfrac{1440}{9}$

$= \mathbf{160}$

1942 ஆம் ஆண்டின் நிறையிட்ட குறியீட்டெண் $= \dfrac{1700}{9}$

$= \mathbf{189{\cdot}89}$

மாதிரி 423

1970ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு 1971ஆம் ஆண்டின் விலைகளின் குறியீட்டெண்ணைக் கணக்கிடவும்:

நுகர் பொருள்கள்	எடை	1970 ஆம் ஆண்டு விலை ரூ. பை.	1971 ஆம் ஆண்டு விலை ரூ. பை.
A	40	8·00	12·00
B	24	4·25	5·50
C	8	1·50	3·00
D	15	7·25	8·75
E	13	12·00	15·50

(பி.ஏ.—சென்னை—1971)

தீர்வு:

குறியீட்டெண் கணக்கிடல்:

நுகர் பொருள்கள்	விலைகள் ஓர் அலகிற்கு 1970 ரூ.பை.	விலைகள் ஓர் அலகிற்கு 1971 ரூ.பை.	விலைச் சார்பிகள் (1970 = 100)	எடை W	பெருக்கல் $P \times W$
A	8·00	12·00	133·3	40	5332·0
B	4·25	5·50	129·4	24	3105·6
C	1·50	3·00	200·0	8	1609·0
D	7·25	8·75	120·7	15	1810·5
E	12·00	15·50	129·2	13	1679·6
				100	13527·7

1971ஆம் ஆண்டின் விலைகளின் நிறையிட்ட குறியீட்டெண் $= \frac{\Sigma PW}{\Sigma W}$

$= \frac{13527 \cdot 7}{100}$

$= 135 \cdot 277$

மாதிரி 424

கீழ்க் காணும் பட்டியலில் தந்துள்ள உணவுப் பண்டகளின் புள்ளி விவரங்களுக்கு, உணவுப் பிரிவின் நிறையிட்ட குறியீட்டெண்ணைக் கணக்கிடுக.

உணவுப் பிரிவின் நுகர் பொருள்கள்	விலைச் சார்பிகள்	எடை
அரிசி (இரண்டாம் அறுவடை)	290	69
பருப்பு	421	4
ஊறுகாய்—மற்றவை	417	14
வெல்லம்	400	2
எண்ணெய்கள்	553	11

(சென்னைப் பல்கலைக் கழகம்)

தீர்வு:

நிறையிட்ட குறியீட்டெண் கணக்கிடல்:

